

# இலங்கை வளர்ச்சி மாற்றத்தின் ஸ்த்திரத்தன்மை 2025-2030

ஓடிஐ க்ளோபல் (ODI Global) மற்றும் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் அனுசரணையின் கீழ் ஒரு சுயாதீன வளர்ச்சி ஆய்வுக் குழுவின் அறிக்கை

ஜுலை 2025

ODI Global

cepa
centre for poverty analysis

# இலங்கை வளர்ச்சி மாற்றத்தின் ஸ்த்திரத்தன்மை 2025-2030

ஓடிஐ க்ளோபல் (ODI Global) மற்றும் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் அனுசரணையின் கீழ் ஒரு சுயாதீன வளர்ச்சி ஆய்வுக் குழுவின் அறிக்கை

ஜுலை 2025

ODI Global

centre for poverty analysis

2025 ஆம் ஆண்டு முதன்முதலில் வெளியிடப்பட்டது
ஓடிஐ க்ளோபல்
203, பிளக்பிரயர்ஸ் வீதி
லண்டன் SE1 8NJ
ஐக்கிய இராஜ்ஜியம்

© ஓடிஐ க்ளோபல் 2025

''ஓடிஐ க்ளோபல்'' நிறுவனத்தால் தட்டச்சு செய்யப்பட்டது
''ஓடிஐ க்ளோபல்'' நிறுவனத்தால் அட்டை வடிவமைப்பு செய்யப்பட்டது

இவ்வெளியீடு வணிக ரீதியாக விற்கப்படாத வரை, வாசகர்கள் தங்களுக்கான நகலை மீள பதிப்பித்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். ''ஓடிஐ க்ளோபல்'' நிறுவனம் உரிய ஒப்புதலையும் வெளியீட்டின் நகல் ஒன்றினையும் கோருகின்றது. ''ஒன்லைன்'' மூலமான பதிப்பினை, ''ஓடிஐ க்ளோபல்'' வலைத்தளத்தில் பெற்றுக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுகொள்ளப்படுகிறார்கள். இந்த வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்கள் ஆசிரியரின்/களின்) தனிப்பட்ட கருத்துக்களே அன்றி ''ஓடிஐ க்ளோபல்'' அல்லது எமது பங்காளர்களின் கருத்துக்களல்ல.

இந்தப் பணி CC BY-NC-ND 4.0 இன் கீழ் உரிமம் பெற்றது.

எவ்வாறு மேற்கோளிடுவது: ஓடிஐ க்ளோபல் மற்றும் CEPA (2025) இலங்கை வளர்ச்சி மாற்றத்தின் ஸ்த்திரத்தன்மை 2025-2030. ஓடிஐ க்ளோபல் அறிக்கை. லண்டன்: ஓடிஐ க்ளோபல் **(www.odi.org/publications/sustaining transformative-growth-in-sri-lanka-odi-cepa-growth-study-report)**

# நன்றியுரை

## இந்த வெளியீடு பற்றி

இந்த அறிக்கையானது சிரிமல் அபேரத்னே, சந்திரநாத் அமரசேகர, ரவின் பஸ்நாயக்க, இந்திரஜித் குமாரசுவாமி, யெவெட் பெர்னாண்டோ மற்றும் டிர்க் வில்லெம் தே வெல்டே, எசல வீரகோன், ஷீயா விக்ரமசிங்க மற்றும் கணேசன் விக்னராஜா ஆகியோரால் வடிவமைக்கப்பட்டுள்ளது. லண்டனில் உள்ள ''ஓடிஐ க்ளோபல்'' மற்றும் கொழும்பிலுள்ள வறுமை ஆராய்ச்சி நிலையம் ஆகிய இரண்டு ஆய்வு நிறுவனங்களின் அனுசரணையில், கணேசன் விக்னராஜாவை ஒருங்கிணைப்பாளராகக் கொண்ட சுயாதீன வளர்ச்சி ஆய்வுக் குழு ஒன்று இவர்களால் நிறுவப்பட்டது.

சுயாதீன ஆய்வுக் குழுவானது, அரச துறை, தனியார் துறை, சுயாதீன ஆய்வு நிறுவனங்கள், மற்றும் சர்வதேச நிறுவனங்களில் உள்ள அனுபவமிக்க நிபுணர்களை உள்ளடக்கியுள்ளது. சுயாதீன ஆய்வுக் குழு உறுப்பினர்கள் தமது தனிப்பட்ட திறன்களின் அடிப்படையில் பணியாற்றியுள்ளதோடு, ஆய்வு முடிவுகள் இவர்களது கருத்துக்களே அன்றி அவர்கள் பணிபுரிகின்ற நிறுவனங்களின் கருத்துக்களல்ல.

## நூலாசிரியர்கள் பற்றி

**ஸ்ரீமல் அபேரத்ன** அவர்கள் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியருமாவார்.

**சந்திரநாத் அமரசேகர** அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் ஆவார்

**ரவின் பஸ்நாயக்க** அவர்கள் முகாமைத்துவப் பணிப்பாளரும், Citi ஸ்ரீலங்கா அலுவலகத்தின் இலங்கைக்கான உத்தியோகத்தர் ஆவார்

**இந்திரஜித் குமாரசுவாமி** அவர்கள் முன்னாள் ஆளுநர், இலங்கை மத்திய வங்கி மற்றும் பொதுநலவாய செயலகத்தின் பொருளாதார விவகாரப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஆவார்.

**யெவட் பெர்னாண்டோ** அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் சிரேஷ்ட பிரதி ஆளுநர் ஆவார்.

**டேர்க் வில்லம் டே வெல்டே** அவர்கள் சர்வதேச பொருளாதார அபிவிருத்திக் குழுவின் பணிப்பாளரும் ''ஓடிஐ க்ளோபல்'' மற்றும் லண்டனிலுள்ள ''SOAS'' பல்கலைக்கழகத்தில் நடைமுறைத்துறையின் பேராசிரியரும் ஆவார்.

**எசல வீரகோன்** அவர்கள் சார்க் அமைப்பின் முன்னாள் செயலாளர் நாயகமும் இலங்கையின் முன்னாள் வெளியுறவுச் செயலாளாளரும் மற்றும் இலங்கை ஜனாதிபதிக்கான முன்னாள் சிரேஷ்ட மேலதிக செயலாளரும் ஆவார்.

**ஷீயா விக்ரமசிங்க** அவர்கள் ''சீபீஎல் (CBL)''; குழுமத்தின், குழு நிர்வாகப் பணிப்பாளர் ஆவார்.

**கணேஷன் விக்னராஜா** அவர்கள் ''ஓடிஐ க்ளோபல்'' நிறுவனத்தின் ஆளுநரும் வருகை தரு சிரேஷ்ட ஆய்வாளரும் ஆவார். மேலும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் கொள்கை ஆய்வு மையத்தின் முன்னாள் தலைமை நிர்வாக பணிப்பாளர் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) ஆய்வுத் துறையின் முன்னாள் பணிப்பாளரும் ஆவார்.

செயலகத்தில் அனிஷ்கா டி சில்வா, ஏஞ்சலா கொலோங்கோ, கிறிஸ்டீன் மாஷா மற்றும் ஷெரிலின் ராகா ஆகியோர் அடங்குவர். பின்னணித் தகவல்கள் மெக்ஸ் மெண்டெஸ்-பர்ரா, ஃபிலிஸ் பாப்பாடாவிட் மற்றும் ஷெரிலின் ராகா ஆகியோரால் வழங்கப்பட்டன.

இக்குறித்த ஆய்வறிக்கை செல்வி ஸ்ரீ தயாளினி சிவலிங்கம் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, திரு. பாசித் ஜனதீன் மற்றும் திரு. ஜோசப் பிரான்சிஸ் ஆகியோரால் சரிபார்க்கப்பட்டது.

**இலங்கை: கடன் செலுத்தத் தவறியதில் இருந்து மாற்றத்தக்க வளர்ச்சி வரை** என்ற ''ஓடிஐ க்ளோபல்'' நிறுவனத்தின் உலகளாவிய கட்டுரைப் புத்தகத்தினை அடிப்படையாகக் கொண்டு, சுயாதீன ஆய்வுக் குழுவிற்கான பணி உருவாக்கப்பட்டுள்ளது. இதன் இரண்டாவது பதிப்பினை (2025 ஏப்ரல் மாதம் இடம்பெற்ற நிகழ்வுகளை உள்ளடக்கிய வகையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது) பின்வரும் இணைப்பின் மூலமாக பெற்றுக்கொள்ள முடியும்: www.odi.org/publications/sri-lanka-from debt-default-to-transformative-growth-second-edition. இந்த அறிக்கையினைத் தயாரிப்பதற்கு 2025 ஜனவரி முதல் ஜூன் வரையிலான காலப்பகுதியில் சுயாதீன ஆய்வுக் குழுவானது ஐந்து முறை சந்திப்பினை மேற்கொண்டுள்ளது.

வணிகச் சங்கங்கள், பல்கலைக்கழகங்கள், அரச உத்தியோகத்தர்கள், இராஜதந்திரிகள், அபிவிருத்திப் பங்காளர்கள், ''ஓடிஐ க்ளோபல்'' மற்றும் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் சக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பல தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் குறித்த ஆய்வுப் பணியின் போது வழங்கிய பரந்துபட்ட கருத்துக்கள், பரிந்துரைகள் மற்றும் தகவல்களுக்கு இக்குறித்த ஆய்வினை மேற்கொண்ட சுயாதீன வளர்ச்சி ஆய்வுக் குழுவின் மனமார்ந்த நன்றிகள்.

# உள்ளடக்கம்

நன்றியுரை / i

அட்டவணைகள் மற்றும் விளக்கப்படங்கள் / iv

சுருக்கெழுத்துக்கள் / v

நிறைவேற்றுச் சுருக்கம் / vi

1 அறிமுகம்: கண்ணோட்டம் மற்றும் கொள்கை முடிவுகள் / 1

2 பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள் / 4

3 குறிப்பிடத்தக்க பொருளாதார ஸ்த்திரத்தன்மை எட்டப்பட்டுள்ளது, ஆனால் அபாயங்கள் இன்னும் நிலவுகின்றன / 7

4 வளர்ச்சித் திட்டத்திற்கான முக்கிய கூறுகளும் கொள்கைகளும் / 12

4.1 சிறந்த பேரினப் பொருளாதாரக் கொள்கைகள் / 12

4.2 கட்டமைப்பு சீர்திருத்தங்கள் / 15

4.3 அதிக வளர்ச்சி அடையக்கூடிய துறைகள் / 17

4.4 வறுமையைக் குறைப்பதற்கான கொள்கைகளை மேம்படுத்துதல் / 21

5 சீர்திருத்தங்களை செயற்படுத்துவதற்கான படிப்பினைகள் / 23

5.1 அரசியல் ஒருமித்த கருத்து இன்மை / 23

5.2 பலவீனமான அரச திறன் / 25

5.3 வரையறுக்கப்பட்ட திட்டக் கண்காணிப்பு / 26

5.4 திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதற்கான முக்கிய நடவடிக்கைகள் / 27

6 முடிவுரை / 29

உசாத்துணைகள் / 33

பின் இணைப்பு 1 பொருட்கள் மற்றும் சேவை ஏற்றுமதியின் பெறுமதி, வெளிநாட்டு நேரடி முதலீடு, சுற்றுலாத்துறை வருமானம்: நாடுகளுக்கிடையிலான ஒப்பீடு / xxiii

பின் இணைப்பு 2 திட்டக் கண்காணிப்பு சிறந்த நடைமுறை / xxv

# அட்டவணை மற்றும் விளக்கப்படங்கள்

## அட்டவணை

**அட்டவணை** ES1 இலங்கையில் வளர்ச்சியை துரிதப்படுத்தவும் வறுமையைக் குறைப்பதற்குமான திட்ட முன்மொழிவுகள், 2025-2030 / x

## விளகக்ப்படங்கள்

**விளக்கப்படம் ES1** பொருளாதார செயல்திறன்: நெருக்கடியிலிருந்து மீட்சி வரை / vii

**விளக்கப்படம் 1** தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி (தற்போதைய அமெரிக்க டொலர் மதிப்பில்) / 2

**விளக்கப்படம் 2** மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொதுபடு கடன் (%) / 4

**விளக்கப்படம் 3** (சனத்தொகையின் சதவீத அடிப்படையில்) ஒரு நாளைக்கு டொலர் 3.65 அடிப்படையில் தலா வறுமை விகிதம், 2017 PPP (கொள்வனவு ஆற்றல் சமநிலை) / 5

**விளக்கப்படம் 4** பயன்படுத்தக்கூடிய மொத்த வெளிநாட்டு நாணய ஒதுக்குகள் (US$), ஒவ்வொரு மாத முடிவிலும் சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டது / 8

**விளக்கப்படம் 5** இலங்கையின் வருடாந்த மற்றும் காலாண்டு அடிப்படையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதங்கள் / 9

**விளக்கப்படம் 6** இலங்கையின் வளர்ச்சிக்கென பயன்படுத்தப்படாத சாத்தியக்கூறுகள் - வர்த்தகம் மற்றும் முதலீடு / 15

# சுருக்கெழுத்துகள்

| | |
|---|---|
| ASEAN | தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (Association of Southeast Asian Nations) |
| CEPA | வறுமை ஆராய்ச்சி நிலையம் (Centre for Poverty Analysis) |
| CSF | ஒரு ஸ்மார்ட் எதிர்காலத்திற்கான மையம் (Centre for a Smart Future) |
| EU | ஐரோப்பிய ஒன்றியம் (European Union) |
| FDI | வெளிநாட்டு நேரடி முதலீடு (Foreign Direct Investment) |
| FIT | நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலை (Flexible Inflation Targeting) |
| FTA | சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (Free Trade Agreement) |
| GDP | மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product) |
| ICT | தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் (Information and Communication Technology) |
| ID | அடையாளப்படுத்தல் (Identification) |
| IMF | சர்வதேச நாணய நிதியம் (International Monetary Fund) |
| IT | தகவல் தொழில்நுட்பம் (Information Technology) |
| MSMEs | நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாண்மைகள் (Micro, Small and Medium Enterprises) |
| NPP | தேசிய மக்கள் சக்தி (National People's Power) |
| PPP | கொள்வனவு ஆற்றல் சமநிலை (Purchasing Power Parity) |
| SOE | அரசிற்கு சொந்தமான நிறுவனங்கள் (State-Owned Enterprises) |
| UK | ஐக்கிய இராச்சியம் (United Kingdom) |
| UNDP | ஐக்கிய நாடுகள் அபவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (United Nations Development Programme) |
| US | ஐக்கிய அமெரிக்க நாடுகள் (United States) |
| WTO | உலக வர்த்தக மையம் (World Trade Organization) |

# நிறைவேற்றுச் சுருக்கம்

இலங்கை ஒரு முக்கியமான/நெருக்கடியான கட்டத்தில் உள்ளது. சுதந்திரத்திற்குப் பிறகு ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு குறிப்பிடத்தக்க வகையில் நிலைப்பெற்றுள்ள போதிலும், மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கான கணிசமான அபாயங்கள் நிலவி வருகின்றன. இச்சூழலில், பேரினப் பொருளாதார ஸ்த்திரத்தன்மையை தொடர வேண்டிய தேவை இருப்பதோடு தேசிய இயலுமையில் புதிய கவனம் செலுத்தி பல்வேறு வளர்ச்சிக் கொள்கைகளை செயல்படுத்த வேண்டியுள்ளது.


2023 சர்வதேச நாணய நிதிய திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்துவதற்கும் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தை செயல்முறையை முடிவிற்கு கொண்டு வருவதற்கும் தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற முயற்சிகள் பாராட்டிற்குரியன. இது மிகவும் அவசியமான கொள்கை நிலைப்பாட்டிற்கான அடித்தளத்தினை வழங்குகின்றது.

- கடந்த மூன்று வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட முயற்சி மற்றும் தியாகத்தின் காரணமாக, இலங்கையின் பொருளாதாரமானது, 2022 ஆம் ஆண்டில் நிலவிய கடன் சுமை மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற இருண்ட நிலையில் இருந்து மீண்டு நிலைபெற்று வருகின்றது. 2022 ஆம் ஆண்டு கடன் திருப்பிச் செலுத்த தவறியதிலிருந்து இலங்கையின் பொருளாதார நிலைக் குறித்த பதிவை விளக்கப்படம் ES1 சுருக்கமாகக் விவரிக்கின்றது.

- (ஆறு காலாண்டுகளாக நிலவி வந்த பாதகமான வளர்ச்சி 2023 ஆண்டு இரண்டாவது காலாண்டில் முடிவிற்கு வந்ததின் பின்னர்) 2024 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5% எனும் ஓரளவு நம்பிக்கையினைத் தரக்கூடிய நிலையை எட்டியது. 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 70% உச்சக்கட்டத்தில் இருந்த பணவீக்கமானது கணிசமானளவு குறைவடைந்துள்ளது.

- இருப்பினும், மதிப்பிடப்பட்ட வருமான அடிப்படையிலான வறுமை (மொத்த சனத்தொகையில் நாளொன்றுக்கு 3.65 அமெரிக்க டொலருக்கும் குறைவான வருமானத்தில் வாழும் மக்கள்) தொடர்ந்து அதிகமாகவே உள்ளது, மேலும் இது 2024 ஆம் ஆண்டில் மக்கள்தொகையில் கால் பகுதியினரை பாதித்துள்ளதோடு, 2021 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகின்ற போது இரண்டு மடங்கு அதிகரித்துமுள்ளது. நெருக்கடியின் போது முன்னெடுக்கப்பட்ட வறுமைக் குறைப்பின் விளைவாக ஏற்பட்ட தலைகீழ் மாற்றத்தின் காரணமாக, 2000 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் இருந்த உயர் வறுமை நிலைமைக்கு இலங்கை மீண்டும் முகங்கொடுத்துள்ளது.

**விளக்கப்படம்** ES 1 பொருளாதார செயல்திறன்: நெருக்கடியிலிருந்து மீட்சி வரை




குறிப்பு: ம = மதிப்பீடு (estimate)

மூல ஆதாரம்: பிரதான அறிக்கையில் உள்ள ஆதாரங்கள்

மறுபடியும் இந்த வலி நிறைந்த கடன் மறுசீரமைப்பு மற்றும் அதிகரித்து வரும் வறுமை நிலை ஏற்படாமல் தவிர்க்க கட்டமைப்பு சீர்த்திருத்தங்களை உடனடியாக செயல்படுத்த வேண்டியது அவசியமாகும். வர்த்தகப் போர் மற்றும் இருண்ட உலகப் பொருளாதாரத்தின் அதிகரித்து வரும் ஆபத்துகள், கடன் அழுத்தத்தில் உள்ள இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். அதிகபட்சமாக, வளர்ச்சி 3% ஆக இருக்கலாம், சீர்த்திருத்தங்கள் இன்றி வளர்ச்சி அதனைவிடவும் சரியக்கூடும். ஏற்கனவே அதிகரித்த நிலையில் உள்ள வருமானம் சார் வறுமை நிலையானது அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஆனாலும், சிக்கலான புவிசார் அரசியல் காலங்களில், மூலோபாய ரீதியாக அமைந்துள்ள இலங்கைக்கு அதன் பொருளாதாரத்தை மாற்றியமைப்பதற்கும், ஏற்கனவே உள்ள உற்பத்தி திறன்களை கட்டியெழுப்புவதற்கும், புதியவற்றை உருவாக்குவதற்கும் மிகப்பெரிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. உதாரணமாக, சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்து வருவதுடன் அதனை மென்மேலும் விரிவுப்படுத்த முடியும். அத்தோடு நாட்டில் டிஜிட்டல் பொருளாதாரம் என்ற ஒரு

விடயம் பயன்படுத்தப்படாமலேயே இருக்கின்றது. விநியோகச் சங்கிலிகளை மாறும் பிராந்திய சக்திகளுடன் இணைப்பதன் மூலமான முக்கிய உற்பத்தி மற்றும் பெறுமதி சேர்ப்பினை மேம்படுத்துவது மற்றொரு விடயமாகும். இறுதியாக, விவசாயத்தில் அதிக உணவுப் பாதுகாப்பை ஆதரிக்கக்கூடிய வாய்ப்புகளும் இருக்கின்றன.

பேரினப் பொருளாதார ஸ்த்திரத்தன்மை, கட்டமைப்பு சீர்த்திருத்தங்கள் மற்றும் முன்னுரிமைத் துறைகளை ஆதரித்தல் ஆகியவற்றின் அடிப்படையிலான வளர்ச்சித் திட்டமே 2025 ஆம் ஆண்டில் முன்னுரிமையாக காணப்படுகின்றது. அத்தகைய திட்டம் 2030 ஆம் ஆண்டு வரை குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்குத் தொடர்ச்சியாக திறம்பட செயல்படுத்தப்பட வேண்டும்.

"ஓடிஐ க்ளோபல்" (ODI Global - UK) மற்றும் வறுமை ஆராய்ச்சி நிலையம் (இலங்கை) ஆகியவற்றின் அனுசரணையில் உருவாக்கபட்ட இச்சுயாதீன வளர்ச்சி ஆய்வானது, அனைத்து பங்குதாரர்கள், குடிமக்கள், அரசாங்கம், வணிகங்கள் மற்றும் குடியியல் சமூகம் போன்றன வரவிருக்கின்ற கடினமான கொள்கைத் தெரிவுகளை எதிர்கொண்டு இந்த முக்கிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்கின்ற போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைக்கான அழைப்பினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆறு பிரதான கொள்கைப் பரப்புகள் இங்கு காணப்படுகின்றன (அட்டவணை ES1 ஐப் பார்வையிடவும்)

1. பேரினப் பொருளாதார ஸ்த்திரத்தன்மையை பேணலும் நம்பகத்தன்மையை மேம்படுத்தலும்
2. உலகளாவிய விநியோகச் சங்கிலிகள், ஏற்றுமதிகள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு போன்றவற்றினை ஊக்குவித்தல்
3. காரணிச் சந்தைகளை மேம்படுத்துதல்
4. துறை மற்றும் சந்தை சார் கொள்கைகளை வடிவமைத்து செயல்படுத்துதல்
5. வறுமையைக் குறைப்பதற்கான கொள்கைகளை மேம்படுத்துதல்
6. வளர்ச்சிக் கொள்கைகளை மையமாகக் கொண்டு ஒருமித்த அரசியல் கருத்தையும் திறனையும் கட்டியெழுப்புதல்.

அட்டவணை ES1: இலங்கையில் வளர்ச்சியை துரிதப்படுத்தவும் வறுமையைக் குறைப்பதற்குமான திட்ட முன்மொழிவுகள், 2025-2030

| திட்ட முன்மொழிவுகள் | குறிப்புகள் |
| --- | --- |
| **பேரினப் பொருளாதார ஸ்த்திரத்தன்மையை பேணலும் நம்பகத்தன்மையை மேம்படுத்தலும்** | |
| 1. மத்திய வங்கிச் சட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துதல் (மற்றும் இலங்கை மத்திய வங்கியின் சுதந்திரத்தைப் பேணுதல்), பொது நிதி முகாமைத்துவச் சட்டம் மற்றும் பொதுக் கடன் முகாமைத்துவச் சட்டம் உள்ளிட்ட விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தை நிறைவு செய்தல். | மத்திய வங்கியின் சுதந்திரம் மற்றும் பேரினப் பொருளாதார ஸ்த்திரத்தன்மை ஆகியன அந்நியச்செலாவணி கையிருப்பின் முகாமைத்துவம் மற்றும் தேசியப் பொருளாதார பாதுகாப்பிற்கு இன்றியமையாதவை ஆகும். அதேவேளை, பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தை செயல்படுத்துவது என்பது நிதி சார் முன்னெச்சரிக்கையை உறுதி செய்யும். |
| 2. வரி சேகரிப்பினை டிஜிட்டல் மயமாக்குவதன் **(RAMIS)** மூலமும் சுங்கம் மற்றும் கலால் திணைக்களத்தின் ஒற்றைச் சாளர அமைப்பின் மூலமும் வரி சேகரிப்பினை அதிகரித்தல் | பொதுத் தகவல் தொடர்பை மேம்படுத்துதல், மேலும் பணம் செலுத்துதல் மற்றும் பணத்தை மீளப் பெறுதல் போன்ற நடைமுறைகளை எளிதாக்குதல்.<br><br>வரி சேகரிப்பிற்கான முயற்சிகளைத் தொடர்தலும், அதிக வரி செலுத்துவோர் மற்றும் வரி ஏய்ப்பு செய்பவர்களிடமிருந்து நிலுவைத் தொகையை சேகரிப்பதில் தீவிர நடவடிக்கை எடுத்தலும். |
| 3. வளர்ச்சிக்கான நிதிச் செலவினங்களின் பெருக்கல் விளைவுகளை அதிகரிக்க, உயர் தாக்கத்தினை ஏற்படுத்தும் துறைகளுக்கு வரவுசெலவுத்திட்ட வளங்களை மீள் ஒதுக்கீடு செய்யும் வகையில் பொது முதலீடுகளை மதிப்பாய்வு செய்தல் | வளர்ச்சியில் பொது முதலீட்டின் தாக்கம் குறித்து தீவிரப் பணிகளை மேற்கொள்ளுதல் (எ.கா பெருக்கிகள்). வளங்களை ஒதுக்கீடு செய்வதன் ஒரு பகுதியாக, வரவுசெலவுத்திட்டத்தினை எதிர்மறையாக பாதிக்கின்ற அரசிற்கு சொந்தமான நிறுவனங்கள் மற்றும் அரச வங்கிகளை மறுசீரமைப்பதற்கான தெரிவுகளை மதிப்பாய்வு செய்தல் (உ.தா. ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை). சிறந்த முகாமைத்துவம், பொது-தனியார் |

| | |
|---|---|
| | கூட்டாண்மைகள் மற்றும் பங்கு விற்பனை போன்ற தெரிவுகள் உள்ளடங்கும். |
| 4. 'வெள்ளை யானைத் திட்டங்களைத்' தடுக்க, நிதி அமைச்சினால் உருவாக்கப்பட்ட பொது முதலீட்டுத் திட்டத்தில் உள்ள அனைத்து உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கும் தீவிரமானதும் வெளிப்படையானதுமான தெரிவு செயல்முறையைப் பயன்படுத்துதல் | இதில் பிரதான உத்தியோகத்தர்களுக்கு செலவு-பயன் பகுப்பாய்வு (cost-benefilt analysis) மற்றும் திட்ட மதிப்பீடு குறித்த பயிற்சியும் உள்ளடங்கும். |
| **உலகளாவிய விநியோகச் சங்கிலிகள், ஏற்றுமதிகள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு போன்றவற்றினை ஊக்குவித்தல்** | |
| 5. இலங்கைக்கு அதிகபட்ச நன்மையை விளைவிக்கும் வகையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை முறையை மூலோபாய ரீதியாக வரைபடமாக்குதலும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை குறித்த பேச்சுவார்த்தைகளுக்கான திறனை உருவாக்குதலும் | பங்களாதேசம், இந்தியா மற்றும் சீனாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் நன்மைகள் குறித்து தீவிரமான தாக்க மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல்.<br><br>தற்போதுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளில் (உ.தா. தாய்லாந்து) விருப்பத்தேர்வுகளைப் பயன்படுத்தக் கூடிய வகையில் வணிகத்தை ஆதரித்தலும் முறையாக வளப்படுத்தப்பட்ட இலங்கை வர்த்தகப் பிரதிநிதி அலுவலகம் மூலம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் குறித்த பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பித்தல்.<br>இலங்கை வர்த்தகப் பிரதிநிதி அலுவலகத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வினை மேற்கொண்டு, சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் குறித்த பேச்சவார்த்தைகளில் திறன் மேபாட்டுத். திட்டங்களை செயல்படுத்துதல்.<br><br>இலங்கை வர்த்தக பிரதிநிதி அலுவலகமொன்றுக்கான சாத்தியக்கூறு ஆய்வினை மேற்கொண்டு, சுதந்திர வர்த்தக உடன்படிக்கை குறித்த பேச்சுவார்த்தைகளில் |

| | |
|---|---|
| | திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல் |
| 6. இலங்கையின் ஒப்பீட்டு நன்மை மற்றும் தேசிய நலனுக்கு ஏற்ப சுங்கவரிகளை பகுத்தறிவுக்குட்படுத்த, பொருத்தமான நிபுணத்துவம் ொகண்ட உறுப்பினர்களையும் நிரூபிக்கப்பட்ட பதிவுகளையும் உள்ளடக்கிய சனாதிபதி சுங்கவரி ஆணைக்குழு ஒன்றினை நியமித்தல். | இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான சுங்க வரிகளை படிப்படியாக குறைத்து, விநியோகச் சங்கிலி முறைக்குள் நுழைவதை ஆதரித்தலும், இறக்குமதிகள் விதிக்கப்படுகின்ற துணை கட்டணங்களை அகற்றுதலும் |
| 7. இலங்கையின் ஏற்றுமதிகள் மீதான எந்தவொரு சுங்க வரி விதிப்பின் அதிகரிப்பினைக் குறைப்பதற்கு ஐக்கிய அமெரிக்காவுடன் அமைதியான இராஜதந்திர உறவினை மேற்கொள்ளுதல். | |
| 8. பொருளாதார இராஜதந்திரத்தின் நன்மைகளை அதிகரிக்க, முக்கிய வர்த்தக, மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கூட்டாளர்களின் சில முக்கிய தூதரக மையங்களை உருவாக்க இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களை மறுசீமைத்தல். | சிறப்பு சந்தைப்படுத்தல் / வணிக ஊழியர்களுடன் (உ.தா. தனியார் துறையைச் சேர்ந்தவர்கள்) மையங்களை (உ.தா. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இங்கிலாந்து, இந்தியா, சீனா, ஜப்பான், சிங்கப்பூர், தாய்லாந்து, பாகிஸ்தான்) தயார்ப்படுத்தல், செயல்திறன் ஊக்கத்தொகைகள் மற்றும் இலக்குகளை வழங்குதல். |
| 9. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கான நுழைவு, வெளியேறுதல் மற்றும் வணிக நடவடிக்கைகள் தொடர்பான சிக்கலான விதிமுறைகளை கணிசமானளவுக் குறைப்பதற்கு ‘‘உத்தரவொன்றினை பிறப்பிப்பதன்’’ மூலமாக | உலக வங்கியின் ‘‘தயார் நிலைக் குறியீட்டு’’ இற்கான தரவுகளை முன்கூட்டியே சேகரித்து, வணிகச் சூழலை மேம்படுத்துவதற்கான ஆதாரங்களைப் பயன்படுத்தவும்.<br><br>சிவப்பு நாடாவைத் துண்டித்து, சிறிய அளவிலான வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பிரவேசத்தையும் அவர்களின் செயல்பாட்டையும் எளிதாக்குதல் |

| | |
|---|---|
| சீர்த்திருத்தங்களை மேற்கொள்ளுதல். | தேசிய பொருளாதாரத்திற்கு பயனளிக்கும் வகையில் கொழும்புத் துறைமுக நகரத்தின் தாமதமான முழு ஆற்றலையும் வெளிப்படுத்துதல். சட்ட கட்டமைப்பையும், பிரத்தியேக ஒருங்கிணைந்த ஒழுங்குமுறை ஆணையத்தையும் விரைவுப்படுத்துதல். |
| 10. மூலோபாய சந்தைகளில் (உ.தா. அவுஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு) இருந்து வெளிநாட்டில் வசிக்கின்ற இலங்கையர்களிடமிருந்து முதலீட்டினை ஊக்குவிப்பதற்கான முதலீட்டுச் சபை மற்றும் வெளிநாட்டு தூதரகங்கள் | வெளிநாட்டில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு வெளிநாட்டில் வசிக்கின்ற இந்திய குடியுரிமை திட்டத்திற்கு மாற்றான ஒரு திட்டத்தை வழங்குதல். |
| 11. பிராந்திய விநியோகச் சங்கிலி ஒருங்கிணைப்பு மற்றும் ஏற்றுமதிகளை, மேம்படுத்த, இலங்கை வணிகங்கள் மற்றும் ஐந்து தென்னிந்திய மாநிலங்களில் உள்ள வணிகங்களுக்கிடையேயான தொடர்புகளை, அந்தந்த வணிகப் பகுதிகள் மேற்கொள்ளும் பரஸ்பர சந்திப்புகள் மூலம் ஊக்குவித்தல். | ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா, தெலுங்கானா மற்றும் தமிழ்நாடு ஆகியன தென்னிந்தியாவின் ஐந்து மாநிலங்களாகும்.<br><br>மேக் இன் இந்தியா (Make in India) திட்டத்தை இலங்கைக்கும் விரிவுப்படுத்துவது ஒரு பயனுள்ள ஊக்குவிப்பாக இருக்கலாம். |
| 12. முக்கியமான வர்த்தகம் தொடர்பான உட்கட்டமைப்பு மற்றும் வர்த்தக வசதிப்படுத்தலில் முதலீடு செய்தல், சுங்க நடைமுறைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் உலக வர்த்தக மைய வர்த்தக வசதிப்படுத்தல் ஒப்பந்தத்தை செயல்படுத்துதல். | போக்குவரத்து துறைகளுடன் தொடர்புடைய துறைமுகம் மற்றும் விமான நிலைய மேம்பாட்டுத் திட்டங்களை மதிப்பாய்வு செய்தல் (உ.தா., கொழும்புத் துறைமுக வடக்கு முனையம், காங்கேசன்துறை துறைமுக விரிவாக்கம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய மற்றும் பலாலி விமான நிலைய விரிவாக்கம்) |

| | |
|---|---|
| | சுங்க நடைமுறைகளை நவீனமயப்படுத்தல் (புதிய சுங்க திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்) மற்றும் உலக வர்த்தக மைய வர்த்தக வசதிப்படுத்தல் ஒப்பந்தத்தை செயல்படுத்தல் |
| **காரணிச் சந்தைகளை மேம்படுத்துதல்** | |
| 13. தொழில்நுட்ப பணியாளர் (நவீன டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு பொருத்தமானவை உள்ளிட்ட) திறன்களை மேம்படுத்துவதற்கு, நிறுவன அளவிலான பயிற்சிக்கான செலவினங்களை ஊக்குவிக்க வரி சலுகைகளை வழங்குதல். | இந்த ஊக்குவிப்புகள், மொத்த விற்பனை வருமானத்தில் குறைந்தபட்சம் 0.5% வரை பயிற்சி செலவுகளுக்கு வழங்கப்படுகின்ற வரிச் சலுகைகளாக இருக்கலாம்.<br><br>பாடத்திட்ட இடைவெளிகளையும் காலங்கடந்த கற்பித்தல் முறைகளையும் நிவர்த்தி செய்ய பாடசாலைகளுக்கான ஆசிரியர் பயிற்சித் திட்டங்களை மீளாய்வு செய்தல். |
| 14. உயர்தர தொழில்களை விரிவுபடுத்த, அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் போன்ற கற்கைகளுக்கான தேசிய சிறப்பு மையம் ஒன்றினை நிறுவுதல். | நன்மதிப்பினை பெற்ற சர்வதேச பல்கலைக்கழகத்துடன் கூட்டு முயற்சியுடன், மொரட்டுவ பல்கலைக்கழகத்தை ஒரு சிறந்த தேசிய மையமாக உயர்த்துவதை கருத்தில் கொள்ளுதல். |
| 15. ஊழிய உற்பத்தித்திறனை அதிகரிக்க, ஒரு வருடத்தில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான ஊதியத்துடன் கூடிய பொது விடுமுறையை பெற்றுக்கொள்வதற்கான உரிமையை சீரமைத்தல். | தற்போது வழங்கப்படுகின்ற பொதுவிடுமுறை நாட்களை, கிழக்கு ஆசியாவின் உயர் செயல்திறன் கொண்ட பொருளாதாரங்களில் வழங்கப்படுகின்ற பொதுவிடுமுறைகளின் அளவிற்கேற்ப படிப்படியாகக் குறைக்கலாம். உதாரணமாக, சிங்கப்பூர் மற்றும் தென்கொரியாவில் தலா 11 பொது விடுமுறைகள் வழங்கப்படுகின்ற அதேவேளை வியட்நாமில் 13 பொதுவிடுமுறைகள் வழங்கப்படுகின்றன. |
| 16. பெண் உத்தியோகத்தர்களின் பங்கேற்பு வீதங்களை அதிகரிப்பதற்கு 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான பராமரிப்பு நிலையங்கள், மதிய உணவு | |

| | |
|---|---|
| மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து வசதிகளை வழங்க நிறுவனங்களை ஊக்குவித்தல். | |
| 17. நாட்டின் பொருளாதாரத்தில் மக்கள் வெளிநாட்டிற்கு புலம்பெயர்ந்ததன் காரணமாக ஏற்பட்ட கடுமையான திறன் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்ய, துபாய் மற்றும் சிங்கப்பூர் மாதிரிகளை பின்பற்றி தற்காலிக புலம்பெயர்வு செயல்முறைகளை எளிமைப்படுத்தி, வேலைவாய்ப்பு சந்தைகளை படிப்படியாக செயல்படுத்துதல். | அரசத்துறை ஊழியர்களுக்கு வெளிநாடுகளில் தற்காலிக வேலைவாய்ப்பு வழங்கும் முகமாக அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் தாக்கத்தினையும் செயல்திறனையும் மதிப்பிடுதல். |
| 18. வணிக பயன்பாட்டிற்கான நிலப் பற்றாக்குறையை நீக்குவதற்கு, 25 வருட குத்தகைக்கு அரச நிலங்களை வழங்கும் வகையில் நிலம் குறித்து செயற்படக்கூடிய வங்கியை செயல்படுத்துதல். | இந்த குத்தகைகள் முறையாக மதிப்பிடப்பட்ட வணிக விதிமுறைகளின் அடிப்படையில் வழங்கப்படுதல் வேண்டும். |
| **துறை மற்றும் சந்தை சார் கொள்கைகள்** | |
| 19. இலங்கையின் துறைசார் மற்றும் வணிக வாய்ப்புகள் குறித்தும் ஒப்பீட்டு அனுகூலங்கள் குறித்தும் தீவிரமான மதிப்பாய்வை மேற்கொள்ளுதல் | உற்பத்தி மற்றும் வர்த்தக புள்ளிவிபரங்கள் மற்றும் நிறுவன தரவுகளை சேகரித்து பகுப்பாய்வு செய்யும் வகையில் அரச திறனை மேம்படுத்தல். ஒப்பீட்டு நாடுகளின் தொகுப்போடு உற்பத்தி மற்றும் வர்த்தக தரப்படுத்தலை ஆதரித்தல். |
| 20. சுற்றுலாத்துறை வருவாய்கள் மற்றும் தேசியமட்ட பரவலையும் ஊக்குவிக்க, இலங்கையை ஒரு பன்முகத்தன்மை கொண்ட, உறுதிப்படுத்தப்பட்ட சுற்றுலாத்தளமாக அடையாளப்படுத்தி சந்தைப்படுத்துவதற்கான செலவினங்களை அதிகரித்தல், | குறைவாக கவனம் செலுத்தப்படுகின்ற பிராந்தியங்களில் வடமத்திய, ஊவா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளடங்குகின்றன.<br><br>"பிலிப்பைன்ஸ் மிகவும் சுவாரசியமானது (it is more fun in the Philippines) அல்லது incredible India, அல்லது "Malaysia Truly Asia" போன்ற |

| | |
|---|---|
| மேலும் குறைவாக கவனம் செலுத்தப்படுகின்ற பிராந்தியங்களின் வளர்ச்சியை அதிகரித்தல். | உதாரணங்களைப் பின்பற்றி, 'அற்புதமான இலங்கை (Fabulous Sri Lanka) போன்ற குறிச்சொல்லினை பயன்படுத்துதல்.<br><br>நாடு முழுவதும் சுற்றுலாத்துறையில் சர்வதேச தரநிலைகளை பின்பற்றுதல் - உடல்சார் பாதுகாப்பு (குறிப்பாக பெண்களுக்கு), விடுதிகள்/விருந்தினர் இல்லங்களின் சேவைத் தரம், உணவகங்கள்/உணவுக் கடைகளில் உணவு சுகாதாரம் மற்றும் பணத்திற்கான மதிப்பு மற்றும் ஸ்த்திரத்தன்மையை உறுதி செய்வதற்கு பொருத்தமான தர உறுதிப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். தாய்லாந்தில் குடியிருப்பாளர் ஒருவருக்கு 0.51 சுற்றுலாப் பயணிகளின் வருகையானது ஒரு முன்மாதிரியாக இருக்கின்றது.<br><br>போக்குவரத்து சார்ந்த விலை நிர்ணயம் உள்ளிட்ட சுற்றுலா சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் சுற்றுலாத் துறையின் நிலையான வளர்ச்சியை ஆதரித்தல். |
| 21. உற்பத்தி திறனை அதிகரிப்பதன் மூலமும் காலநிலை எதிர்ப்புத் திறன்கொண்ட விவசாயத்திற்கான நவீன நடைமுறைகள் மற்றும் சட்ட சீர்த்திருத்தங்கள் மூலமும் விவசாயம் மற்றும் மீன்பிடித்துறைக்கான பெறுமதி சேர்ப்பினை அதிகரித்தல். | நெல் வயல் சட்டத்தினை மீள்பரிசீலனை செய்தல்.<br><br>ஏற்றுமதி சந்தைகளில் சர்வதேச சுகாதாரம் மற்றும் தாவர சுகாதாரம் மற்றும் ஏனைய தரநிலைகளை கட்டாயம் ஏற்றுக்கொண்டு கடைப்பிடித்தல்.<br><br>உற்பத்திக்கான உள்ளீடுகளை வாங்குதல் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்றவற்றில் சிறு உரிமையாளர்கள் ஒன்றிணைந்து நடவடிக்கையினை முன்னெடுத்தல்.<br><br>பயிற்சி மற்றும் முக்கிய செயல்பாட்டு குறிகாட்டிகள் ஊடாக, விவசாய சேவை மையங்களின் செயல்பாடுகளை புத்துயிர் பெறச் செய்தல். பல்கலைக்கழகத்தில் விவசாய/விவசாய-வணிகத் துறையின் |

| | |
|---|---|
| | பயிற்சித் திறனை/அறிவினை வணிகமயமாக்குதல். |
| 22. எரிசக்தி பாதுகாப்பு மற்றும் மின் வர்த்தகத்தை மேம்படுத்த, இருதரப்பு மின் கட்டமைப்பு மற்றும் எரிபொருள் குழாய் இணைப்புகளை இந்திய உதவித் திட்டம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு போன்றவற்றினை பயன்படுத்துதல் | |
| 23. தடைகளை நீக்குவதிலும் போட்டித் தன்மையை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தி, உற்பத்தியை திறம்பட ஆதரிக்கக்கூடிய கொள்கைகள் மற்றும் சீர்த்திருத்தங்களை செயல்படுத்துதல். | வணிக நடவடிக்கைகளுக்கு மிகவும் ஏற்ற சூழலை உருவாக்குவதற்கு விதிமுறைகள், நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகளை எளிமைப்படுத்துதலும் பகுத்தறிவுக்குட்படுத்தலும்.<br><br>தடையற்ற கைத்தொழில்மயமாக்கல் செயன்முறை மற்றும் கைத்தொழில்களின் சர்வதேச போட்டித்தன்மையை பேணுவதற்கு, முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை உற்பத்தி உள்ளீடுகளின் கிடைக்கும் தன்மை, மலிவுத்தன்மை மற்றும் தரம் போன்றவற்றினை உறுதி செய்தல்.<br><br>எல்லை கடந்த கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை சீர்த்திருத்துகின்ற வேளையில் டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட செயன்முறைகள் மற்றும் முதலீட்டு பாய்ச்சல்களை ஒழுங்குப்படுத்த ‘‘ஒற்றைச் சாளர’’ முறையைப் பயன்படுத்துதல்.<br><br>ஸ்திரத்தன்மை தரநிலைகள் மற்றும் டிஜிட்டல் செயல்முறைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் 21ஆம் நூற்றாண்டின் தேவைகளுடன் ஒத்துப்போகும் வகையில் |

| | |
|---|---|
| | கைத்தொழில்மயமாக்கலை செயல்படுத்துதல் வேண்டும்.<br><br>சமச்சீரான வளர்ச்சியை ஊக்குவித்து, மூலோபாய தொழில்களை ஆதரிக்கும் நோக்கில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகள் (SMEs), பிராந்திய தொழில்மயமாக்கல் மற்றும் இலக்கிடப்பட்ட தொழில்கள் போன்ற முக்கியமான துறைகளில் அரசாங்கத்தின் பங்கினை விரிவுபடுத்துதல். |
| 24. டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பில் **(Digital Public Infrastructure (DPI)** முதலீடு செய்தலும், இணைய வழி அரச பொது சேவைகளை மேம்படுத்துதலும், டிஜிட்டல் கட்டண முறைகளின் கவர்ச்சிகரத்தன்மையை அதிகரித்தல் | வலுவான தரவு பாதுகாப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு தரநிலைகள் மற்றும் ஒழுங்குமுறை சீர்த்திருத்தங்களுடன் டிஜிட்டல் அடையாளப்படுத்தலை அறிமுகப்படுத்துவதை விரைவுப்படுத்துதல்.<br><br>டிஜிட்டல் பொருளாதார மற்றும் சேவைகள் குறித்த தரவுத்தளத்தை உருவாக்குதல் (உ.தா. இலத்திரனியல் வணிகம் மற்றும் இலத்திரனியல் கட்டணங்கள் குறித்த ஆய்வு). |
| **வறுமையைக் குறைத்தல்** | |
| 25. உணவுப் பாதுகாப்பினை மேம்படுத்தவும், அதிகரிக்கின்ற உணவு விலைகளைக் குறைக்கவும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்து, உணவுப் பற்றாக்குறையைக் சமாளித்தல். | உணவுப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு உடனடி நடவடிக்கையாக (தேவைக்கேற்றவாறு) உணவு இறக்குமதியை தாராளமயமாக்குதல்.<br><br>சிறந்த குளிர்பதன சேமிப்பு முறைகளைக் கொண்ட பல்பொருள் அங்காடிகள்/வர்த்தகர்களுடன் ஒன்றிணைதல், விரைவில் அழுகக்கூடிய உணவினை எடுத்துச் செல்லக்கூடிய நவீன குளிர்ப்பதன் சேமிப்பு கொள்கலன்களை அறிமுகப்படுத்துதல், உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல இலங்கை போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த பேருந்துகளைப் பயன்படுத்துவதற்கான முன்னோடித் திட்டமொன்றினை ஆராய்தல், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதற்கு (சாத்தியமான போது) |

| | |
|---|---|
| | புகையிரதப் போக்குவரத்தில் முதலீடு செய்தல்.<br><br>குறைந்த வருமானம் ஈட்டுபவர்களுக்கு கட்டுப்படுத்தப்பட்ட விலையில் அடிப்படை உணவுப் பொருட்களை விற்பனை செய்வதற்காக சதோச விற்பனை நிலைய வலைப்பின்னல்களை மேம்படுத்தல். |
| 26. அஸ்வெசும (**Aswesuma**) திட்டத்தின் கீழ், தற்காலிமாக அத்தியாவசியப் பொருட்களின் நுகர்வினை தக்கவைத்துக் கொள்வதற்கு, வறியவர்களை நோக்கி காலவரையறை கொண்ட பணப்பரிமாற்றங்களை முக்கிய இலக்காகக் கொண்டு, தரமான வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான தகைமையை பெறுவதற்கான ஒருங்கிணைந்த ஆதரவினை வழங்குதல். | உதாரணாக, வீட்டிற்கான மின்சார நுகர்வு அல்லது தொலைபேசிக்கான தரவு பயன்பாடு போன்றன, துல்லியமான இலக்கு என்று ஒன்றில்லாத சந்தர்ப்பத்தில், வருமானம் ஈட்டக்கூடிய ஒரு மாற்று வழியாகப் பயன்படுத்தப்படலாம்.<br><br>இணைய வழி பணப்பரிமாற்றங்களை செயல்படுத்தவும் சைபர் பாதுகாப்பு திறன்களை மேம்படுத்தவும் தனித்துவமான டிஜிட்டல் அடையாளப்படுத்தல் திட்டத்தினை செயல்படுத்துவதை விரைவுப்படுத்தல்<br><br>வறியவர்களும் வங்கிக் கணக்கிளை திறந்து இணைய வழி பணப்பரிமாற்றங்களை செயல்படுத்த ஊக்குவித்தல். |
| 27. தற்போதுள்ள நிதி நிறுவனங்கள் (மற்றும் அல்லது புதிய நிறுவனங்கள்) மூலம் நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியான்மைகளுக்கு (**MSMEs**) அதிகரித்த மேம்பாட்டு நிதியின் நிலைத்தன்மையை ஆய்வு செய்தலும் தேசியளவில் நம்பகமான கடன் மதிப்பீட்டு முறையை உருவாக்குதலும். | குறுகிய, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியான்மைகள் மத்தியில் இடர்பாடுகளை அதிகரிக்கின்ற, கடன் முதிர்ச்சியின் பொருத்தப்பாடின்மையினை குறைப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) அல்லது ஜப்பான் போன்ற வெளிநாட்டு மூலங்களிடமிருந்து நீண்ட கால கடன் வசதிகளைப் பெற முயற்சித்தல்.<br><br>சுற்றுலா மற்றும் விவசாயம் போன்ற துறைகளுக்கான நிதி குறித்து கவனம் செலுத்துதல்.<br><br>தொடர்புடைய அனைத்து தரவுகளையும் வழங்குகின்ற மூலங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் இலங்கையின் கொடுகடன் தகவல் |

| | |
|---|---|
| | பணியகத்தின் (CRIB) கடன் மதிப்பீட்டு சேவைகளை விரிவுப்படுத்தல்.<br><br>ஏற்றுமதி பல்வகைத்தன்மையை இலக்காகக் கொண்ட அதிக பெறுமதியுடன் கூடிய தொழில் துறைகளை ஊக்குவித்தல்.<br><br>குறுகிய, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் நிதி மற்றும் சந்தைகளை அணுகுவதற்கு உதவும் வகையில், ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB), கைத்தொழில் அபிவிருத்தி சபை (IDB), வணிகத்துறை, இலங்கை ஏற்றுமதி கடன் காப்பீட்டு நிறுவனம் (SLECIC) போன்றவற்றின் சேவைகளை வலுப்படுத்தல்.<br><br>வணிகம் குறித்த இடர்களை குறைப்பதற்காக காப்பீட்டுத் தயாரிப்புகளின் குறைந்தளவிலான பயன்பாட்டினை நிவர்த்தி செய்தல்.<br><br>அனைத்து பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன், இலங்கை மத்திய வங்கியின் தேசிய நிதி உள்ளடக்க மூலோபாயத்தை (National Financial Inclusion Strategy) (நிதி குறித்த அடிப்படை அறிவுக்கான வழிகாட்டுதல் உள்ளடங்கலாக - Financial Literacy Roadmap) செயல்படுத்துதல். |
| **கொள்கை ஒருமித்த கருத்தையும் அரச திறனையும் கட்டியெழுப்புதல்** | |
| 28. தென்கொரியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் வெற்றிகரமான அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய வளர்ச்சித் திட்டம் ஒன்றினை வகுப்பதற்கு, அரசாங்கம் சுயாதீன வளர்ச்சி ஆணைக்குழு ஒன்றினை நியமித்தல். | திட்டம் மற்றும் அதன் நீண்டகால செயல்படுத்தல் குறித்து ஒருமித்த கருத்தினை உருவாக்க, முக்கிய பங்குதாரர்களுடன் ஒரு தேசிய மாநாடொன்றினை அரசாங்கம் ஏற்பாடு செய்தல். இந்த மாநாட்டிலிருந்து கிடைப்பெறுகின்ற கருத்துக்களை பொருளாதார மாற்றச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான வழிகாட்டுதலாக பயன்படுத்தல். |

| | |
|---|---|
| 29. கொள்கை செயல்படுத்தல் மற்றும் திட்ட கண்காணிப்பில் முன்னுரிமையை நிர்ணயம் செய்தல் மற்றும் அதனை செயல்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பினை வலுப்படுத்துவதற்கு, அபிவிருத்தி அமைச்சுகளின் செயலாளர்கள் குழுவை அமைப்பதன் மூலம் கொள்கை செயல்படுத்தல் மற்றும் திட்டக் கண்காணிப்பில் லேசர் தொழில்நுட்பம் போன்ற கூர்மையான கவனத்தை உருவாக்குதல்; அனைத்து கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை கண்காணிப்பதற்கான ஒரு தேசிய செயல்பாட்டு நிலையம் **(National Operations Room)**; திட்டங்களை உள்வாங்குவதற்கான தீவிர செயல்முறை; முன்னுரிமைப்படுத்தப்பட்ட பாரியளவிலான திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கக்கூடிய திட்டக் கண்காணிப்புக் குழு. | இத்தகைய முன்முயற்சிகள் பேரினப் பொருளாதாரத்தை நிலைநிறுத்த வேண்டிய அவசியத்தின் ஊடாகவும், வழிநடத்தப்படுதல் வேண்டும். |
| 30. அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பொதுக் கொள்கை மற்றும் நிர்வாகம் குறித்த பயிற்சியை கணிசமானளவு மேம்படுத்துதல். | உலகத் தரம் வாய்ந்த சர்வதேச பல்கலைக்கழகத்துடன் ஒன்றிணைந்து, அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நிர்வாகப் பயிற்சிக்காக, சிறந்த பொதுக்கொள்கை மற்றும் பொது நிர்வாகப் பாடசாலை ஒன்றினை நிறுவுதல் (உதாரணமாக, பாரிசில் உள்ள சயின்ஸ் போ, கான்பெராவில் உள்ள அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தில் உள்ள க்ரா.ஃபோர்டு |

| | |
|---|---|
| | பொதுக்கொள்கை பாடசாலை மற்றும் சிங்கப்பூரில் உள்ள லீ குவான் யூவ் பாடசாலை போன்றவற்றைக் குறிப்பிடலாம்).<br><br>இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தை (SLIDS) சர்வதேச நிறுவனங்களுடன் (உ.தா., மலேசியா, இந்தியா, மற்றும் அவுஸ்திரேலியா) இணைத்து, அரச சேவையில் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்களுக்கு நவீன பொது சேவை முகாமைத்துவம், சேவை வழங்கலுக்கான பணப் பெறுமதி, மற்றும் ஒருமைப்பாடு குறித்து பயிற்சி வழங்குதல். |


# 1. அறிமுகம்: கண்ணோட்டம் மற்றும் கொள்கை முடிவுகள்

இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தபோது, பெரும்பாலான சமூக-பொருளாதார குறிகாட்டிகளில் இலங்கை ஜப்பானுக்கு அடுத்தப்படியாகவே இருந்தது, மேலும் 1960 ஆம் ஆண்டில் தனிநபர் வருமானத்தில் தென்கொரியாவை விட முன்னணியில் இருந்தது. இருந்த போதிலும், அதன் பின்னர் பெரும்பாலான அண்டை ஆசிய நாடுகளை விட பின்தங்கிய நிலையிலுள்ளது (பின்னிணைப்பு வரைபடம் 1 மற்றும் அட்டவணை 1 இனைப் பார்க்கவும்).[1] பொருளாதாரம் மற்றும் இலங்கை மக்கள் மீதான தாக்கத்தினை பொறுத்த வரை, 2022 ஆம் ஆண்டில், நாடு சுந்திரத்திற்குப் பிறகு மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கியது, வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்த தவறியதன் மூலம் இந்த நிலை மேலும் மோசமடைந்தது. இதன் விளைவாக, இலங்கை தனது 17 ஆவது சர்வதேச நாணய நிதிய திட்டத்தினை அணுகியது.

கொவிட்-19 இற்குப் பின்னர் ஏற்பட்ட நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்ற நடுத்தர வருமானம் பெறுகின்ற நாடுகளுக்கு இலங்கையின் அனுபவம் சிறந்த பாடமாக அமைகின்றது. 2024 ஆண்டிலிருந்து ஸ்த்திர நலையை அடையத் தொடங்கியுள்ள பொருளாதாரம், நேர்மறையான வளர்ச்சி, குறைந்த பணவீக்கம், சுற்றுலாத் துறையில் ஏற்பட்டுள்ள விரைவான முன்னேற்றம் மற்றும் பங்குச் சந்தையின் ஏற்றம் (சர்வதேச நாணய நிதியம், 2025) ஆகியவற்றினால் வலுவடைந்துள்ளது. இருந்த போதிலும், தொடர்ச்சியான ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் பொருளாதார மாற்றத்தினை அடைவதில் இன்னும் சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது.

[1] இலங்கையின் வளர்ச்சியில் ஏற்பட்ட சரிவுக்கான விளக்கங்கள் கெலிகம (2000), அமரசேகர மற்றும் வேணுகனன் (2021) ஆகியோரின் ஆய்வுகளில் இடம்பெற்றுள்ளன.

**விளக்கப்படம் 01:** தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி (தற்போதைய அமெரிக்க டொலர் மதிப்பில்)




மூலம்: உலக வங்கி, உலக அபிவிருத்தி குறிகாட்டிகள் தரவுத்தளம்

இலங்கை இன்று வாய்ப்பு மற்றும் ஆபத்து ஆகிய இரண்டின் விளிம்பிலும் உள்ளது. புதிய தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கம், கடன் ஸ்த்திரத்னமையை உறுதி செய்து, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளைத் தவிர்த்து, அனைத்து இலங்கையர்களுக்கும் வழங்கக்கூடிய உள்ளடக்கிய மற்றும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வளர்ச்சியை நோக்கிய ஒரு புதிய பாதையை வகுப்பது மிகவும் அவசியமாகின்றது. வழக்கமான வணிக முறையைப் பின்பற்றுவது என்பது, போட்டித்தன்மையைக் குறைத்து, மங்கலான வளர்ச்சியையும் கடன் சுமையையும் ஏற்படுத்தக்கூடிய முட்டுக்கட்டையாகும்.

இந்த முக்கியமான தேவையை நிவர்த்தி செய்வதற்கு, ODI க்ளோபல் நிறுவனம் நாட்டிற்கான புதிய வளர்ச்சித் திட்டத்தினை உருவாக்கும் நோக்கில், இலங்கையின் தலைசிறந்த பொருளாதார நிபுணர்களைக் கொண்ட ஒரு ஆய்வுக் குழுவினை அமைத்துள்ளது. இந்த முயற்சியானது, இது இலங்கை மற்றும் சர்வதேச முன்னணி நிபுணர்களின் (விக்னராஜா மற்றும் டெ வெல்டே, 2025 பதிப்புகள்) கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட 27 நடைமுறைக் கொள்கை முன்மொழிவுகளை உள்ளடிக்கிய, எம்மால் இணைந்து தொகுக்கப்பட்ட ***“இலங்கை: கடன் செலுத்தத் தவறியதில் இருந்து மாற்றத்தக்க வளர்ச்சி வரை”*** என்ற கட்டுரைத் தொடரினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

இலங்கை தனது மீட்பு திட்டத்திற்கு மத்தியில், அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டுள்ள பரஸ்பர வரி விதிப்புகளால் உருவாகும் புதிய உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

இந்த வரி விதிப்புகள் முன்மொழியப்பட்டவாறு செயல்படுத்தப்பட்டால், இது இலங்கையின் ஏற்றுமதியின் கால் பங்கினை நேரடியாக பாதிக்கின்ற அதேவேளை நாட்டின் ஏற்றுமதி போட்டித்திறனையும் போட்டி நாடுகளுக்கு மத்தியில் குறைக்கக்கூடும். உலகளாவிய வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைகள், கொள்கை நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் உலகப் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய சரிவு போன்றன இலங்கையின் மீட்சிப் பாதையை மேலும் சிக்கலாக்குகின்றன. இருப்பினும் இத்தகைய சவால்கள், இலங்கையின் பாதுகாப்பு வர்த்தக கொள்கை அமைப்பின் சிக்கல்களை எடுத்துக்காட்டினாலும், அவை தேவையான சீர்த்திருத்தங்களுக்கான வாய்ப்புகளையும் வழங்குகின்றன.


பொருளாதார நெருக்கடியின் நீடித்த விளைவுகள் மற்றும் வெளிப்புற அழுத்தங்களைக் கருத்தில் கொண்டு, மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதும் நிலையானதுமான வளர்ச்சியை அடைவது மிகவும் முக்கியமானது. நிதி ஒருங்கிணைப்பு மற்றும் கடன் ஸ்த்திரத்தன்மையுடன் கூடிய மீட்புத் திட்டத்தை ஆதரிப்பதற்கு வளர்ச்சி அவசியமாகும். நேர்மறையாக கூறுவதாயின், சிறந்த அரச செலவுகள் விரைவான பொருளாதார வளரச்சியை தோற்றுவிக்கும். இது வெளிப்புற அதிர்ச்சிகளுக்கு எதிரான நாட்டின் பாதிப்பினைக் குறைத்து, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பொருளாதார நெருக்கடியை தவிர்க்க உதவும். வேலைவாய்ப்புகளை உருவாக்கி, வருமானம் உழைக்கக்கூடிய நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், நெருக்கடியால் ஏற்படக்கூடிய வருமான இழப்புகள் மற்றும் பாரிய வறுமை நிலைமைகளை நிவர்த்தி செய்வதற்கு உதவும் ஒரு வழியாக வளர்ச்சி செயற்படுகின்றது. இறுதியாக, அடுத்த 25 வருடங்களுக்குள் இலங்கை தனது உயர் வருமான நாடாக மாறுவதற்கு, இந்த நீடித்த உயர் வளர்ச்சி வேகம் அடிப்படைத் தேவையாக அமைகின்றது.

இந்த அறிக்கை பின்வருமாறு கட்டமைக்கப்பட்டுள்ளது. பிரிவு 2 பொருளாதார நெருக்கடிகளை காரணங்களை சுருக்கமாக கலந்துரையாடுகின்றது. பிரிவு 3 குறிப்பிடத்தக்க பொருளாதார ஸ்த்திரத்தன்மையை வளர்ந்து வரும் அபாயங்களுடன் மதிப்பாய்வு செய்கின்றது. பிரிவு 4 வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய கூறுகள் மற்றும் கொள்கைகளை வகுக்கின்றது. பிரிவு 5 சீர்திருத்தங்களை செயல்படுத்துவதற்கான அனுபவ ரீதியான பாடங்களை விவரிக்கின்ற அதவேளை பிரிவு 6 குறித்த அறிக்கைக்கான முடிவுரையை வழங்குகின்றது. அட்டவணை ES1 இலங்கையில் வளர்ச்சியை விரைவுப்படுத்துவதற்கும் வறுமையைக் குறைப்பதற்கும் அவசியமான திட்டங்களை வழங்குகின்றது.

# 2. பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள்

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தலைமையிலான NPP அரசாங்கம் 2024 ஆம் ஆண்டு ஒரு முக்கியமான தருணத்தில் பதவியேற்றதால், உயர் வளர்ச்சியை அடைவது முன்னுரிமையாக அமைகின்றது (விக்னராஜா, 2024a). சுதந்திரத்திற்குப் பிந்தைய மோசமான பொருளாதார நெருக்கடியின் (20233-2023) விளைவாக, ஏப்ரல் 2022 இல் வெளிநாட்டுக் கடன்களை திரும்பச் செலுத்துவதற்கு தவறிய இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருகின்றது (பாசு, 2022 ஈ.ஏ.எப் பதிப்பாசியர்கள், 2023). 2018 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பொதுபடு கடன் விகிதம் 84% சதவீதத்தில் இருந்து 116 சதவீதமாக கணிசமானளவு அதிகரித்துள்ளது (வரைபடம் 2 இனைப் பார்க்கவும்). கடந்த 15 வருட காலப்பகுதியில் இலங்கையின் கடன் விவரமானது, குறைந்த சலுகைகளைக் கொண்ட நிதியுதவி, சர்வதேச மூலதனச் சந்தைகளை அணுகுவதில் ஏற்பட்ட இழப்பு, இருதரப்பு கடன்களை அதிகமாக பெற்றுக்கொண்டமை மற்றும் வருமான பற்றாக்குறை உள்ளடங்களான கடன் அமைப்பு மற்றும் இடர்பாடுகளின் அடிப்படையில், கணிசமானளவு மாற்றமடைந்ததினைத் தொடர்ந்து பெற்றுக்கொண்ட கடனை திரும்பச் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டது (ஸ்மித், 2025).

**விளக்கப்படம் 2:** மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொதுபடு கடன் (%)





குறிப்பு ம = மதிப்பீடு

மூலம்: சர்வதேச நாணய நிதிய உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் (WEO) ஏப்ரல் 2025 தரவுத்தளம்.

1970 காலப்பகுதிகளில் இலங்கை ஒரு வறிய நாடாக இருந்தபோதிலும், 'அடிப்படைத் தேவைகளை' வெற்றிகரமாக பூர்த்திசெய்த ஒரு நாடு என சுட்டிக்காட்டப்பட்டது. அத்தகைய நிலையில் இருந்து, தற்போது கடன் தவணையை செலுத்துவதில் தோல்வியடைந்த, அபிவிருத்தியில் பின்னடைவை பிரதிபலிக்கும் ஒரு நாடாக மாறியுள்ளது (ஐசன்மேன், 1980). 2019 மற்றும் 2023 இற்கு இடையில் வறுமையில் உள்ள மக்களின் பங்கு (வருமானம் அடிப்படையிலான வறுமை நாளொன்றுக்கு 3.65 மெரிக்க டொலர்கள் என அளவிடப்படுகின்றது) 11.3 சதவீதத்தில் இருந்து 27.1 சதவீதம் என்ற வகையில் இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளதாக உலக வங்கி மதிப்பிடுகின்றது (வரைபடம் 3 இனைப் பார்க்கவும்). நெருக்கடியின் போது வறுமைக் குறைப்பில் ஏற்பட்ட தலைகீழ் மாற்றம் இலங்கையை 2000 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் காணப்பட்ட உயர் வறுமை நிலைக்கு இலங்கையை மீண்டும் கொண்டு சென்றுள்ளது.

**விளக்கப்படம் 3:** (சனத்தொகையின் சதவீத அடிப்படையில்) நாளொன்றுக்கு டொலர் 3.65 அடிப்படையில் தலா வறுமை விகிதம், 2017 PPP (கொள்வனவு ஆற்றல் சமநிலை)




குறிப்புகள்: ம = மதிப்பீடு. 2020-2024 இற்கான மதிப்பீடுகள் உலகவங்கியின் தற்போதைய மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டவை.

மூல ஆதாரங்கள்: 1985-2019 தரவுகளுக்கு உலக அபிவிருத்தி குறிகாட்டிகள், உலக வங்கியின் பேரின வறுமைக் குறித்த கண்ணோட்ட அறிக்கை, 2020-2021 தரவுகளுக்கு 2023 இல் இடம்பெற்ற வசந்த கால கூட்டங்கள் (spring meetings) மற்றும் 2022-2024

தரவுகளுக்கு உலக வங்கியின் பேரின வறுமை குறித்த கண்ணோட்ட அறிக்கை, 2023 இல் இடம்பெற்ற வசந்த கால கூட்டங்கள்.

மேலும், 2022-2023 காலப்பகுதியில் 25,000 வீடுகளில் நடத்தப்பட்ட தேசிய சனத்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், இலங்கையின் சனத்தொகையில் 55.7 சதவீதமானோர் பலபரிமாணங்களில் பாதிக்கப்படக்கூடியவர்கள் என UNDP மதிப்பிட்டுள்ளது (UNDP, 2023). கல்வி, சுகாதாரம், பேரிடர் மற்றும் வாழ்க்கைத்தரம் உள்ளிட்ட முக்கிய பரிமாணங்களை உள்ளடக்கிய 12 குறிகாட்டிகளில் குறைந்தபட்சம் மூன்றையாவது அடைந்துகொள்வதில் 12.3 மில்லியன் மக்கள் தோல்வியடைந்துள்ளனர் என்பதையே இது சுட்டிக்காட்டுகின்றது. இருப்பினும் எதிர்பார்த்ததை விட அதிக இழப்புகளுக்கு வழிவகுக்கும் வகையில் சில தரவுகள் இரு முறை கணக்கிடப்பட்டிருக்கலாம்.


இந்த நெருக்கடிக்கான காரணங்கள் சிக்கலானவையாக இருப்பதோடு அவை பரவலாக விவாதிக்கப்படுகின்றன. விரிவாகக் கூறுவதாயின், இவற்றை உள்ளக மற்றும் வெளியகக் காரணிகள் என வகைப்படுத்தலாம் (வீரசிங்க, 2021; அபேரத்ன, 2023; விக்னராஜா, 2024b; அதுகோரல, 2025; தேவராஜா, 2025). 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களின் விளைவுகள், கொவிட்-19 தொற்றுநோய், ரஷ்யா-உக்ரைன் போர் மற்றும் செங்கடல் மோதல் போன்றன வெளியகக் காரணிகளுக்குள் அடங்கும். வர்த்தகம் செய்யக்கூடிய உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வளர்ச்சிக்கு ஏற்ப போதுமான அளவில் பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்படாமை, குறைந்த வருமானத்தைக் ஈட்டக்கூடிய உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு (உ.தா., அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையம்) சீனாவின் கொள்கை வங்கிகளிடமிருந்து வணிகக் கடன் பெறுதல், தொடர்ச்சியான சென்மதி நிலுவைப் பற்றாக்குறை மற்றும் 2019-2022 காலப்பகுதியில் நிலவிய தவறான பொருளாதார முகாமைத்துவம் (உள்நாட்டில் ‘‘உள்நாட்டுத் தீர்வுகள்’’ எனக் குறிப்பிடப்படுகின்றது), உற்பத்தித் திறன் வளர்ச்சியில் கவனம் செலுத்தாமை, தொழில் முனைவோரின் சந்தை மீதான பொறுப்புக்கூறலும் குடிமக்கள் மீதான அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலும் குறைவாக காணப்படுகின்றமை போன்றன உள்ளகக் காரணிகளுக்குள் அடங்கும்.

வெளியகக் காரணிகளை விடவும் உள்ளகக் காரணிகள் தெளிவாக விளங்கிக்கொள்ளக் கூடிய திறனைக் கொண்டுள்ளன என்ற ஒருமித்த கருத்து தற்போது நிலவி வருகின்றது. நாட்டின் ஜனாதிபதி திசாநாயக்கவும் அவரது தேசிய மக்கள் கட்சியும் மக்கள் துயரைத் தீர்க்கவும் ஊழல் அற்ற நிர்வாகத்தினை கட்டியெழுப்புவதையும் அடிப்படையாகக் கொண்டு பிரச்சாரங்களை முன்னெடுத்ததோடு, அனைத்து இலங்கை மக்களுக்கும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான ஒரு தெளிவான பாதையை அமைப்பதாக உறுதியளித்தனர் (NPP, 2024).

# 3. குறிப்பிடத்தக்க பொருளாதார ஸ்த்திரத்தன்மை அடையப்பட்டுள்ள போதிலும், அபாயங்கள் தொடர்ந்து நிலவுகின்றன

இலங்கையின் அண்மைய பொருளாதார கண்ணோட்டமானது எச்சரிக்கையுடன் கூடிய நம்பிக்கையினை வழங்குகின்றது (விக்னராஜா மற்றும் டெ வெல்டே, 2025). இலங்கை மத்திய வங்கியின் விவேகமான பணவியல் மற்றும் நிதியியல் ஸத்திரத்தன்மை கொள்கைகள், 3 பில்லியன் டொலர் பெறுமதியான சர்வதேச நாணய நிதியத்தின் நான்கு ஆண்டுகள் திட்டம் மற்றும் இந்தியாவின் 4 பில்லியன் டொலர் இடைக்கால நிதியுதவி ஆகியவற்றின் மூலம் கடுமையான பேரினப் பொருளாதார குழப்பங்களுக்கு பின்னர் பொருளாதாரம் ஸ்த்திர நிலையை அடைந்துள்ளமையை காண முடிகின்றது (வீரசிங்க, அமரசேகர மற்றும் ஜெகஜீவன், 2025; ப்ரூயர் மற்றும் வோல்டெமைக்கேல், 2025). நாட்டின் ஜனாதிபதி திசாநாயக்க அவர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு உறுதியளித்திருக்கின்ற போதிலும், அதிகரித்த வறுமையை குறைப்பதற்கு அவசியமான அதிகரித்த சமூக செலவுகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறையை முழுமையாக நிறைவேற்றுதல் போன்ற நாட்டிற்கு தேவையான விடங்களை தொடர்ச்சியாக செயற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் அளித்துள்ளமையானது பாராட்டத்தக்க விடயமாகும். தனியார் பங்குதாரர்கள் மற்றும் சீனாவுடனான டொலர் 17.5 பில்லியன் பெறுமதியான கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் மிகவும் அவசியமான நிவாரணத்தை அளித்துள்ளது, மேலும் சுற்றுலாத்துறையின் மீளெழுச்சி அந்நிய செலாவணி இருப்புகளை அதிகரித்துள்ளது (நிதி, பொருளாதார ஸ்த்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, 2024). ஏப்ரல் 2022 மற்றும் மே 2025 வரை குறைந்த இறையாண்மை நிலையிலிருந்து பயன்படுத்தக்கூடிய வெளிநாட்டு நாணய ஒதுக்குகள் (US$) படிப்படியாகக் அதிகரிப்பதை விளக்கப்படம் 4 காட்டி நிற்கின்றது. 2022 இல் சீன மக்கள் வங்கி உடனான $1.4 பில்லியன் பரிமாற்றம் குறித்த தரவு வரைபடத்தில் உள்ளடக்கப்படவில்லை.

**விளக்கப்படம் 4** பயன்படுத்தக்கூடிய மொத்த வெளிநாட்டு நாணய ஒதுக்குகள் (US$), ஒவ்வொரு மாத முடிவிலும் சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டது





மூல ஆதாரம்: இலங்கை மத்திய வங்கியின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள்.

பெப்ரவரி 2025 இன் நடுப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசாங்கத்தின் முதல் வரவுசெலவுத்திட்டமானது, நிதி ஒருங்கிணைப்பு மற்றும் சீர்திருத்த முயற்சிகளைத் தொடரும் நோக்கினை பரிந்துரைக்கின்றது. இது புதிய அரசாங்கத்தின் நடைமுறை முயற்சியான சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும், சமமான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான அதன் பணிப்பாணையை நிறைவேற்றுவதையும் சமநிலைப்படுத்துவதை சுட்டிக்காட்டுகின்றது. படிப்படியான நிதி ஒருங்கிணைப்பு, சமூக நலன் மற்றும் கல்விக்கான செலவினங்களை அதிகரித்தல் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான சீர்த்திருத்தங்கள், கடனை திரும்பச் செலுத்துதல் மற்றும் பொருளாதார ஸ்த்திரத்தன்மையை பூர்த்தி செய்தல் ஆகியவற்றின் மத்தியில் வருமானத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்பட்டது (இலங்கை பாராளுமன்றம், 2025). இத்தகைய நடவடிக்கைகள் மூலம், புதிய அரசாங்கம் நடுத்தர காலப்பகுதியில் 5 சதவீத பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்க்கின்றது.

இத்தகைய சூழலில், புதிய அரசாங்கம் ஒரு நிலையான பொருளாதாரத்தை அடைந்துள்ளது. விளக்கப்படம் 4, 2023 மற்றும் 2024 இற்கிடையில் வளர்ச்சி -2.3 சதவீதத்தில் இலிருந்து 5.0 சதவீதமாக உயர்வடைந்துள்ளதைக் காட்டுகின்றது. இருப்பினும், வரவுசெலவுத்திட்ட வளர்ச்சி 2024 மற்றும் 2025 இற்கும் இடையில் 4.5 சதவீதத்தில் இருந்து 3.0 சதவீதமாகக் குறைவடைந்து, 2030 வரை அடுத்த 5 ஆண்டுகளுக்கு 3 சதவீதமாக இருக்குமென சர்வதேச நாணய நிதியம் எதிர்வு கூறியுள்ளது (சர்வதேச நாணய நிதியம், 2025). சுவாரசியமாக, உலக வங்கியின் வளர்ச்சி குறித்த எதிர்வுகூறல்களும் 2024 இல் 5.0 சதவீதத்தில் இருந்து 2025 ஆம் ஆண்டில் 3.5

2030 வரை அடுத்த 5 ஆண்டுகளுக்கு 3 சதவீதமாக இருக்குமென சர்வதேச நாணய நிதியம் எதிர்வு கூறியுள்ளது (சர்வதேச நாணய நிதியம், 2025). சுவாரசியமாக, உலக வங்கியின் வளர்ச்சி குறித்த எதிர்வுகூறல்களும் 2024 இல் 5.0 சதவீதத்தில் இருந்து 2025 ஆம் ஆண்டில் 3.5 சதவீதமாக குறைவடையும் என சுட்டிக்காட்டுகின்றன (உலக வங்கி, 2025). இருப்பினும், முன்னோக்கிய பாதை இன்னும் நிச்சயமற்றதாகவே உள்ளது. இந்த நிச்சயமற்ற தன்மையைக் கடப்பதற்கான சிறந்த வழி, சாத்தியமான இடர்களை நிவர்த்தி செய்யக்கூடிய வலுவானதொரு திட்டத்தை உருவாக்குவதாகும்.

**விளக்கப்படம் 5:** இலங்கையின் வருடாந்த மற்றும் காலாண்டு அடிப்படையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதங்கள்




மூல ஆதாரம்: இலங்கை மத்திய வங்கியின் வேறுபட்ட ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள்.

பொருளாதாரம் குறித்த கண்ணோட்டம் சாதகமானதாக இருந்த போதிலும், எதிர்காலத்தில் எழக்கூடிய அபாயங்களை தற்போதுள்ள புதிய அரசாங்கம் நேரடியாக எதிர்கொண்டு சமாளிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. ஒரு முக்கியமான அபாயம் இலங்கைக்கு வெளியில் நிலவி வருகின்றது. இது அமெரிக்க நிர்வாகத்தின் வரி உயர்வு கொள்கைகள் மற்றும் சீனா மீதான கடுமையான கொள்கைகள் மற்றும் வர்த்தகப் பங்காளர்களின் பதில் நடவடிக்கைகள் ஆகியன இந்தோ-பசுபிக் பிராந்தியத்தின் புவியியல் சார் சூழ்நிலையை பாதித்து வர்த்தகப் போருக்கு வழிவகுக்கக்கூடிய எதிர்வுகூற முடியாத சர்வதேச வர்த்தகக் கொள்கை சூழ்நிலையுடன் தொடர்புடையதாகும் (தகாடா, 2025). அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது வர்த்தக மிகை, தேசிய வர்த்தகத்தில் உள்ள தடைகள் மற்றும் நாணய மாற்று வீத கொள்கை போன்றவற்றினை உள்ளடக்கிய ஒரு சூத்திரத்தின் அடிப்படையில், ஏப்ரல் 2, 2025 அன்று, இலங்கை மீது 44 சதவீத வரிகளை அமெரிக்கா அறிவித்தது. அமெரிக்கா அறிவித்தபடி வரிகளை அமுல்படுத்தினால், இலங்கை ஏற்றுமதி போட்டித்தன்மையை இழப்பதனால் அமெரிக்க

சந்தைக்கான அதன் ஏற்றுமதியில் கால்பங்கினை பாதிக்கக்கூடிய வாய்ப்புள்ளது. மேலும், இலங்கையை விட குறைவான வரி விதிப்பினைக் கொண்ட பெரும்பாலான போட்டி நாடுகளுடன் ஒப்பிடுகின்ற போது, நாடு ஒரு பாதகமான சூழ்நிலையை எதிர்கொள்ளக்கூடும்.

இலங்கைப் பொருளாதாரத்தில் இவ்வரி விதிப்பு ஏற்படுத்துகின்ற தாக்கங்களை மதிப்பிடுவதற்கான நேரம் இன்னும் வரவில்லை என்றாலும், ஒட்டுமொத்தமாக அந்நியச் செலாவணி வருமானத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தலாம், மேலும் இதன் விளைவாக வளர்ச்சி, வேலைவாய்ப்புகள் மற்றும் வறுமை குறைப்பில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். உலகளவில் இந்த வரி விதிப்பானது, 1930களில் நிலவிய உலகப் பொருளாதார சூழ்நிலையான, 'அயலாரை வறியோராக்கும்' வரிக் கொள்கைகள் மற்றும் ஒரு ஆழமான உலகளாவிய பொருளாதார மந்தநிலைக்கு திரும்பவும் இட்டுச்செல்வதாக அமையலாம் என சிலர் குறிப்பிடுகின்றனர். எனவே, நிச்சயமற்ற சர்வதேச வர்த்தகக் கொள்கை சூழலைச் சமாளிக்க இலங்கைக்கு மிகவும் நெகிழ்ச்சியான அணுகுமுறை தேவைப்படுகின்றது.

ஏனையவை இலங்கைக்குள்ளே நிலவுகின்ற பிரச்சினைகளாக காணப்படுகின்றன. உதாரணமாக, தனியார் மற்றும் உத்தியோகப்பூர்வ கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் இருந்தபோதிலும், அரச பொதுபடு கடன் மட்டங்கள் அதிகமாக நிலைத்திருக்கக்கூடும் (தற்போதைய சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் நிறைவடைந்த பிறகு 2027 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 95 சதவீதம்). வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் அரச துறையைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் அதிகப்படியான ஊதியக் கோரிக்கைகளை முன்வைக்கும் அபாயமும், இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதை தொடர்ந்து எதிர்பார்த்ததை விட அதிகமான மோட்டார் வாகன இறக்குமதி அந்நியச் செலாவணியை பாதிக்கக்கூடிய அபாயமும் உள்ளது (ஃபிட்ச் மதிப்பீடுகள் [Fitch Ratings], 2025).

வேகமாக அதிகரித்து வருகின்ற வயதாகி வருகின்ற மக்கள் தொகை இலங்கையின் குடித்தொகையில் ஏற்படுத்துகின்ற பாதகமான விளைவுகளுக்கு மத்தியில் தொழில்சார் நிபுணத்துவத்தைக் கொண்டவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது மற்றுமொரு ஆபத்தாகும். 2022 ஆம் ஆண்டில் மட்டும், தகவல் தொழில்நுட்பம், வங்கி, சந்தைப்படுத்தல் மற்றும் மருத்துவ உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த சுமார் 300,000 நிபுணர்கள் சிறந்த வேலைவாய்ப்புகளைத் தேடி வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர் (இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், 2024). வளர்ச்சியை தூண்டுவதற்கு தேவையான மனித வளங்களை உள்ளடக்கிய குழுவில் பற்றாக்குறை நிலவி வருவதால், திறமையானவர்களின் வெளியேற்றமானது வணிகம் மற்றும் அரசாங்கம் ஆகிய இரண்டிற்கும் ஒரு கடுமையான சவாலை ஏற்படுத்துகின்றது (கலுவாராச்சி, ஜெயதிலக, மற்றும் ரஹ்மான், 2024). இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கொள்கைகள், நாட்டிற்குள் நுழைவதையன்றி நாட்டை விட்டு வெளியேறுவதையே அனுமதிக்கின்றன, இதன் விளைவாக நாட்டிற்குள் மனித வள இழப்பு ஏற்படுகின்றது.

திறமையான தொழில் நிபுணர்கள் வெளிநாட்டிற்கு செல்வதற்கு தடை ஏற்படுத்துவதற்கு பதிலாக, அதிக நெகிழ்ச்சியான வேலைவாய்ப்பு சந்தை நிலைமைகளின் கீழ் அவர்கள் நாட்டில் தங்குவதற்கான சூழ்நிலையை உருவாக்குவது மிக முக்கியமானதாகும். அவர்களின்

கொண்டு, திறன் இடைவெளிகளைக் குறைக்க 'திறமையுள்ள வெளிநாட்டவர்களை' ஈர்ப்பதற்கான வழிமுறைகளை அமைப்பது பயனுள்ளதாக இருக்கும். நீண்ட காலத்திற்கு வளர்ச்சி வேகத்தை தக்கவைத்துக்கொள்ள இது அவசியமாகின்றது.

# 4. வளர்ச்சி திட்டத்திற்கான முக்கிய கூறுகளும் கொள்கைகளும்

அட்டவணை ES 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டம் ஆறு முக்கிய கொள்கைகளை உள்ளடக்கியுள்ளது.

1. பேரினப் பொருளாதார ஸ்த்திரத்தன்மையைத் தொடருதலும் நம்பகத்தன்மையை அதிகரித்தலும்
2. உலகளாவிய விநியோகச் சங்கிலிகள், ஏற்றுமதிகள் மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் போன்றவற்றினை ஊக்குவித்தல்
3. காரணிச் சந்தைகளை மேம்படுத்துதல்
4. துறை மற்றும் சந்தை சார்ந்த கொள்கைகளை வடிவமைத்து செயல்படுத்துதல்
5. வறுமையைக் குறைப்பதற்கான கொள்கைகளை மேம்படுத்துதல்
6. வளர்ச்சி தொடர்பான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, அரசியல் ஒருமித்த கருத்தையும் திறனையும் உருவாக்குதல்

இந்தப் பிரிவானது சிறந்த பேரினப் பொருளாதார கொள்கை (4.1), கட்டமைப்பு சீர்திருத்தங்கள் (உலகளாவிய விநியோகச் சங்கிலிகள், வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் போன்றவற்றை ஊக்குவிப்பதற்கான எடுத்துக்காட்டுகள் மற்றும் காரணிச் சந்தைகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட) (4.2) குறித்து விவாதிக்கின்றது. இது துறைசார் கொள்கைகளுக்கான (4.3) எடுத்துக்காட்டுகளை வழங்குவதோடு வறுமையைக் குறைப்பதற்கான கொள்கைகளை (4.4) மேம்படுத்துகின்றது. பிரிவு 5, வளர்ச்சி தொடர்பான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, அரசியல் ஒருமித்த கருத்தையும் திறனையும் கட்டியெழுப்புவதை கவனத்தில் கொள்கின்றது.

## 4.1. சிறந்த பேரினப் பொருளாதாரக் கொள்கைகள்

ஒரு செயல்திறனுள்ள வளர்ச்சித் திட்டத்திற்கு திடமான பேரினப் பொருளாதார அடிப்படைகள் எனும் ஒரு வலுவான தளமே ஆதாரமாக தேவைப்படுகின்றது. இதற்கு, இலங்கை அதன் தொடர்ச்சியான பேரினப் பொருளாதார அழுத்த சுழற்சிகளை உடைத்தெறிய வேண்டியது அவசியம். இதனோடு தொடர்புபடும் வகையில், புதிய பொது நிதி முகாமைத்துவச் சட்டம் (2024) மற்றும் சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் கீழ் நிதி சார்ந்த விதிகளை கடுமையாக்குவதன் மூலம், மூலக் காரணமாக விளங்குகின்ற நீடிக்க முடியாத நிதிப்பற்றாக்குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. வரி வருமானம் அதிகரிக்கின்ற போதிலும், மக்கள் செலவினத் திட்டங்களின் விரிவாக்கத்தால் அது பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்து, நடுத்தர கால ஒருங்கிணைப்பு வலுப்படுத்தப்பட வேண்டும். முந்தைய நிதி முகாமைத்துவ பொறுப்புச் சட்டத்தைப் (2023) போலன்றி, தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக ஆண்டுதோறும் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன: ஆரம்ப மிகை 2.3%, வருமானம்

15% மற்றும் ஆரம்பச் செலவினம் 13%. வருமானம் அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பு, பேரினப் பொருளாதார ஸ்த்திரத்தன்மையை அடைவதில் மையமாக உள்ளது.

மேலதிகமாக, வருவாய் நிறுவனங்களை டிஜிட்டல் மயமாக்கலானது இந்த விடயத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. தற்போது வரை, இலங்கையில் நிதிப் பெருக்கிகளின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு தாக்கங்கள் மீது குறைந்தளவான கவனமே செலுத்தப்படுகின்றது (அதாவது நிதி வேகம் என்று சொல்வதை விட வளர்ச்சியை ஆதரிக்கும் செயலில் உள்ள இலக்கிடப்பட்ட நிதிக் கொள்கைகள்). ஆய்வு மற்றும் கொள்கை நடவடிக்கைகளுக்கு ஒரு முக்கியமான ஒரு பகுதியாகும். வருமானம் அதிகரித்துள்ள போதிலும், பொருளாதாரத்தில் அரசின் விரிவான பங்கு காரணமாக, அரச செலவினங்களை நியாயப்படுத்துவது தொடர்ந்தும் ஒரு முன்னுரிமையாககவே காணப்படுகின்றது.

தனியார்மயமாக்கலை நிராகரிக்கின்ற அதேவேளையில், அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் (SOEக்கள்) நிர்வாகத்தினை மேம்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இருப்பினும், ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் போன்ற அதிக நஷ்டத்தை ஏற்படுத்தக்கூடிய சில அரசுசாரா நிறுவனங்களை தனியார்மயப்படுத்தல் அல்லது மறுசீமைப்பு செய்வதற்கான அவசியம் ஏற்படலாம், ஏனெனில் அவை அரச நிதியை தொடர்ந்தும் வீணாக்குவது நீண்டகால நிதி ஸ்த்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாக அமைகின்றது. சர்வதேச நிதி நிறுவனங்களின் ஆதவுடன், அரசின் செயற்பாடுகள் பொருத்தமான அளவில் அமைப்பதற்கும், தனியார் துறையினால் வழிநடத்தப்படுகின்ற வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் மேலும், அரசாங்கம் வரவிருக்கு ஆண்டுகளில் ஆரோக்கியமான நிதியினை உறுதிசெய்வதற்கும் ஒரு மூலோபாயத்தை அரசாங்கம் வகுத்து செயல்படுத்துதல் வேண்டும்.

பொருத்தமான பணவியல் மற்றும் நிதிக் கொள்கைகளும் வளர்ச்சி திட்டத்தின் முக்கிய கூறுகளாகும். 2023 ஆம் ஆண்டு மத்திய வங்கிச் சட்டமானது, நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கு நிர்ணயத்தையும் அதனோடு கூடிய நெகிழ்வான நாணயமாற்று வீதக் கொள்கைகளையும் மேற்கொள்வதற்கான ஒரு கட்டமைப்பை வழங்குகின்றது. மத்திய வங்கியின் சுயாதீனத்தை அதிகரிப்பதுடன் கூடிய சிறந்த பொறுப்புக்கூறல் விதிகள், மத்திய வங்கி அரசாங்கத்திற்கு நாணய நிதியளிப்பை வழங்குவதைத் தடுக்கின்றன, மேலும் சிறந்த நிதி ஒழுக்கம் மற்றும் இருப்புகள் / பேரின ரீதியான பாதுகாப்புகளை கட்டியெழுப்புவதற்கும் உதவுகின்றன.

நாணயக் கொள்கையை பாதித்ததோடு மட்டுமல்லாமல், பேரினப் பொருளாதார அழுத்தங்களை மேலும் அதிகரித்த நிதி மேலாதிக்கமானது, மத்திய வங்கிச் சட்டத்தின் (2023) மூலம், இலங்கை மத்திய வங்கியின் நிர்வாக அமைப்புகளில் திறைசேரியின் பங்கேற்பினை நீக்குதல்; வரவுசெலவுத் திட்டத்தில் ஏற்படுகின்ற பற்றாக்குறைக்கு மத்திய வங்கி நிதியளிப்பதைத் தடுத்தல்; தகவல் சார்ந்ததும், எதிர்கால நோக்குடையதுமான நாணயக் கொள்கையை வகுப்பதற்கான, நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலை (FIT) பயன்படுத்துவதன் மூலம், நிர்வகிக்கப்பட்ட வட்டி விகிதங்கள் ஊடாக ஏற்படும் நிதி ஒடுக்குமுறையைத் தடுத்தல்; மற்றும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலின் (FIT) கீழ் தேவைப்படுகின்ற

வெளிப்புறக் கணக்கின் மீது ஏற்படுகின்ற அழுத்தங்களை எதிர்கொள்வதற்கான முதலாவது பாதுகாப்பு நடவடிக்கையாக, நெகிழ்வான நாணயமாற்று விகிதத்தை முகாமைத்துவம் செய்வதை ஏற்றுக்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளை செயல்படுத்தியதன் ஊடாக நிவர்த்தி செய்யப்பட்டது. சுருக்கமாக, பேரினப் பொருளாதாரக் கொள்கை வகுப்பின் புதிய அணுகுமுறையைத் (சட்டங்களில் பொதிந்துள்ள தெளிவான கட்டமைப்புகளை அடிப்படையாக் கொண்டது) தொடர்ந்து பராமரிக்க வேண்டியது அவசியமாகின்றது.


மேலும், கடன் முகாமைத்துவம் பல்வேறு பிரிவுகளைக் கொண்ட அமைப்பிலிருந்து ஒருங்கிணைந்த கடன் முகாமைத்துவ அலுவலகமாக மாற்றமடைந்ததின் மூலம் கடன் முகாமைத்துவம் வலுப்படுத்தப்பட்டுள்ளது, இது நிலையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய சிறந்த மூலோபாய அணுகுமுறைக்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும்.

அது மட்டுமல்லாது, நிதித்துறை ஒழுங்கமைக்கப்பட்டு, உயர் வளர்ச்சித் துறைகள் மற்றும் சிறு வணிகங்களை ஆதரிக்கும் வகையில் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். அண்மையில் நிறுவப்பட்ட 'தேசிய கடன் உத்தரவாத நிறுவனமானது' ஒரு சிறந்த முயற்சியாகும். இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் முழு ஆற்றலையும் பயன்படுத்தி, கடன் குறியீட்டெண், பாதுகாப்பான பரிவர்த்தனை பதிவேடு உள்ளிட்ட கருவிகள் சிறந்த கொடுகடன் கலாச்சாரங்களை உருவாக்குவதற்கு உதவும். தற்போது காணப்படுகின்ற வங்கி மற்றும் வங்கி சாரா நிதி அமைப்பு போதுமானதா? அல்லது ஒரு புதிய அபிவிருத்தி நிதி நிறுவனம் அவசியமா? என்பதை தீர்மானிப்பதற்கு, உலகளாவிய சிறந்த நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்ட மேலதிக ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. வங்கிகளின் வழக்கமான அழுத்தப் பரீட்சிப்புக்கான வழிமுறைகளில் உலகளாவிய சிறந்த நடைமுறைகளைத் தொடர்ந்து செயல்படுத்துவது, பாதகமான பொருளாதார அதிர்ச்சிகளைத் தாங்கக்கூடிய அளவிற்கு வங்கிகளிடம் போதுமான மூலதனம் இருக்கின்றதா என்பதைத் தீர்மானிப்பதற்கு மிகவும் முக்கியமானதாகும். மேலும், தற்போதுள்ள வங்கிகளை ஒருங்கிணைத்தல்/சீரமைத்தல் மற்றும் அவற்றின் வணிக மாதிரிகளை மீளாய்வு செய்தல் போன்ற அதன் செயல்திறன்/உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் பரிவர்த்தனை செலவுகளைக் குறைப்பதற்கும் உதவும்.

## 4.2. கட்டமைப்பு சீர்த்திருத்தங்கள்[2]

வறுமை மற்றும் பல் பரிமாணங்களில் நிலவுகின்ற பாதிப்புகளின் தீவிரமான அதிகரிப்பினை மாற்றியமைக்கவும், 2027/28 காலப்பகுதியில் மற்றுமொரு கடன் மறுசீரமைப்பு ஏற்படுவதை தவிர்க்கவும், 5 சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சி அடைவது அவசியமாகின்றது (குணதிலக, 2024). இருப்பினும், நட்டாண்டு வளர்ச்சி விகிதம் 3 சதவீதமாக இருக்கும் என சர்வதேச நாணய நிதியத்தால் மதிப்பிடப்பட்டுள்ளது (சர்வதேச நாணய நிதியம், 2024). எனவே, பொருளாதாரத்தின் வளர்ச்சிக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்களில் லேசர் (laser) போன்ற தெளிவான கவனத்தை செலுத்துவது மிகவும் அவசியமாகின்றது. நீண்டகாலமாக கிடப்பில் கிடந்த இச்சீர்திருத்தங்களில், காரணிச் சந்தை மற்றும் அரசிற்கு சொந்தமான நிறுவனங்களின் சீர்திருத்தங்கள், முதலீட்டுச் சூழலை மேம்படுத்துதல், முதலீட்டு ஊக்குவிப்பினை வலுப்படுத்துதல், வர்த்தக ஒப்பந்தங்கள், வர்த்தக வசதி உள்ளிட்ட வர்த்தக கொள்கை சீர்த்திருத்தங்கள், மற்றும் கல்வி, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு ஆகியன உள்ளடங்குகின்றன.

**விளக்கப்படம் 6** இலங்கையின் வளர்ச்சிக்கென பயன்படுத்தப்படாத சாத்தியக்கூறுகள் - வர்த்தகம் மற்றும் முதலீடு




மூல ஆதாரம்: உலக அபிவிருத்தி குறிகாட்டிகள்

இலங்கையின் சர்வதேச பொருளாதாரக் கொள்கைளும் அதே அளவிற்கு முக்கியமானவையாகும். மோசமான பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுடன், அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கான

2 இந்த அறிக்கையில் “கட்டமைப்பு சீர்திருத்தங்கள்” சொல் பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்றது மேலும், பொருளாதாரத்தை மாற்றியமைக்கவும், துறை ரீதியான மாற்றங்கள் அல்லது துறைகளுக்குள் அதிக உற்பத்தித்திறன் கொண்ட நடவடிக்கைகளை நோக்கி நகர்த்தவும் உதவும் பல்வேறு கொள்கைகளைக் குறித்து நிற்கின்றது. 1990களில் உருவான “வாஷிங்டன் ஒப்பந்தம்” என அழைக்கப்படுகின்ற நிலையான கொள்கைத் திட்டங்களை விட இது மிகவும் விரிவான கொள்கைகளின் தொகுப்பாகும். மெக்மில்லன், பேஜ், பூத் மற்றும் டேவெல்டே (2017) இனைப் பார்க்கவும்.

கொள்கை கட்டமைப்பு (ஏற்றுமதி, சர்வதேச நேரடி முதலீகளை ஈர்த்தல், சுற்றுலா மற்றும் பணவனுப்பல்கள் போன்றன) பயனற்றதாகவே இருந்து வந்தது. உதாரணமாக, பொருளாதாரம் வர்த்தகம் நோக்கம் கருதி பகுதியவில் திறந்துவிடப்பட்டதாலும், உள்நாட்டு வர்த்தகத்தை மட்டும் கருத்தில் கொண்டு செயற்படுகின்ற வலுவான வணிகக் குழுக்களின் நடத்தை காரணமாகவும், இலங்கையின் வர்த்தக கொள்கை அமைப்பில் ஏற்றுமதிக்கு எதிரான பாரபட்சம் நிலவுகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. மேலும் நீண்ட காலமாக நிலவுகின்ற வரி மற்றும் இறக்குமதி வரி விதிப்பு மீதான விலக்குகள் சர்வதேச நேரடி முதலீடு நாட்டிற்குள் வருவதில் சிறிதளவு தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. கடனை உருவாக்காத அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கு விரிவான மற்றும் ஒருங்கிணைந்த தேசிய மூலோபாயம் ஒன்றினை மேற்கொள்வது அவசியமாகின்றது. இது பின்வருவனவற்றை வலியுறுத்துவதாக இருத்தல் வேண்டும்:

- இறக்குமதி பாதுகாப்பினை படிப்படியாக குறைப்பதுடன், மிகவும் பயனுள்ள ஏற்றுமதி சந்தைப்படுத்தல் மற்றும் மிகவும் யதார்த்தமான நாணயமாற்று விகிதத்தின் மூலம் வர்த்தக முறைமையில் ஏற்றுமதிக்கு எதிராக நிலவுகின்ற பாரபட்சங்களைக் குறைத்தல்.

- சிறந்த இலக்கிடப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு, கால வரையறைக்குட்பட்ட முதலீட்டு ஊக்குவிப்புகள் மற்றும் ஒப்புதல் செயன்முறைகளை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் செயல்திறன் மற்றும் முதலீட்டைத் தடுக்கும் சிக்கலான சிவப்பு நாடாவைத் துண்டித்தல்.

வேகமாக வளர்ந்து வரும் மிக முக்கிய பொருளாதாரமான இந்தியாவிடம் இருந்தான முதலீடுகள், தொழில்நுட்ப பரிமாற்றம், ஏற்றுமதிகளுக்கான சந்தை அணுகல் மற்றும் ஒத்துழைப்புகளில் இருந்து இலங்கைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகளை உறுதி செய்வதற்கு எமது அண்டை நாடான இந்தியாவுடனான பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது மிக முக்கியமானதாகும். டிசம்பர் 2024 இல் ஜனாபதி திசாநாயக்க இந்தியாவிற்கு மேற்கொண்ட பயணமும், ஏப்ரல் 2025 இல் இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கைக்கான விஜயமும் வலுவான இருதரப்பு உறவுகளை ஏற்படுத்தக்கூடிய நம்பிக்கைக்குரிய ஒரு அடித்தளமாக அமைகின்றன. உயர் வளர்ச்சித் துறைகளில் இரு வணிக நிறுவனங்களுக்கிடையிலான தொடர்புகள், எல்லை கடந்த வலுசக்தி திட்டங்கள், டிஜிட்டல் அடையாளப்படுத்தல் திட்டம், இலங்கைக்குள்ளான பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபாவினை பயன்படுத்துவதற்கு அனுமதித்தல் மற்றும் பேச்சுவார்த்தையின் கீழ் ஆழமான இருதரப்பு வர்த்தக உடன்படிக்கை போன்றவற்றில் உறுதியான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதில் இப்போது கவனம் செலுத்தப்பட வேண்டும் (விக்னராஜா மற்றும் கிரிபழனி, 2024).[3] தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கத்தினைச் (ASEAN) சேர்ந்த சிறிய நாடுகளுடனான ஜப்பானின் உறவு பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பை வளர்த்துள்ளமையானது, அத்தகைய முயற்சிளை மேற்கொள்கின்ற நாடுகளுக்கு இது பெறுமதிமிக்க மாதிரியாக இருக்கின்றது.

[3] "ஓடிஐ க்ளோபல்" இனால் மேற்கொள்ளப்பட்ட மாதிரியாக்கப் பணிகள், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (FTA) மூலம் வரி தாராளமயமாக்கலில் இருந்து இலங்கைக்கு பொருளாதார நன்மைகள் கிடைக்கப்பெறலாம் என்பதை எடுத்துக்காட்டுகின்றது (மென்டெஸ் பர்ரா மற்றும் பலர்., 2025 ஐப் பார்க்கவும்). தொடர்ந்து மாதிரியாக்கப் பணிகள் மிகவும் விரிவான இருதரப்பு வர்த்தக சுதந்திர உடன்படிக்கையினால் ஏற்படக்கூடிய பொருளாதார தாக்கங்களை ஆராய முயற்சிக்கின்றன.

(கோஜிமா, 2000). இது தென்கிழக்கு ஆசியாவில் உலகளாவிய விநியோகச் சங்கிலிகள் மற்றும் வேலைவாய்ப்புகளின் அதிகரிப்பிற்கும், பிராந்திய வர்த்தகம் மற்றும் நாணய ஒத்துழைப்பிற்கான கட்டமைப்பு உருவாகவும் வழிவகுத்தது.

சீனா, கொரியா, தென்கிழக்கு ஆசியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து பெறக்கூடிய அபிவிருத்திக்கான கணிசமான ஆதரவு, சந்தைக்கான அணுகல் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகையினால் பெறப்படுகின்ற வருமானங்கள் போன்றவற்றினைப் பயன்படுத்திக் கொள்ள இலங்கைக்கு உதவும் வகையில், அணிசேரா வெளியுறவுக் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றுவது முக்கியமாகும்.

## 4.3 அதிக வளர்ச்சி அடையக்கூடிய துறைகள்

ஒரு வெற்றிகரமான வளர்ச்சித் திட்டத்திற்கு, அதிக வளர்ச்சி அடையக்கூடிய துறைகளைக் கருத்தில் கொண்டு அவற்றை ஆதரிப்பது அவசியம். துறைகளைத் தேர்ந்தெடுக்கும் போது அதிகாரிகளும் தொடர்புடைய அரச நிறுவனங்களும் தரவுகள் மற்றும் அனுபவ ரீதியான ஆதாரங்களை விரிவாக ஆய்வு செய்வது மிக அவசியமாகும். வளர்ச்சி ஆய்வுக் குழுவின் தகவல்களை கவனத்தில் கொள்கின்ற போது, நாட்டின் வளர்ந்து வரும் ஒப்பீட்டு நன்மையில் சுற்றுலாத்துறை, விவசாயம், உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் போன்ற பல துறைகள் காணப்படுகின்றன.

### 4.3.1. சுற்றுலா

குறிப்பாக, சுற்றுலாத்துறை புதிய அரசாங்கத்திற்கு விரைவான வெற்றியை பெற்றுக்கொடுக்கக்கூடிய ஒரு துறையாக காணப்படுகின்றது. இது நீண்ட காலமாக இலஙடகையின் வளர்சிசியில் முக்கிய பங்கினை வகிக்கின்ற துறையாக காணப்படுவதோடு, பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் மீளவும் புத்துயிர் பெற ஆரம்பித்திருக்கின்றது. 2024 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 2 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதுடன், இது 2023 இற்கான வருகையை விட 38 சதவீம் அதிகமாகும் (இலங்கை சுற்றுலா அபிவிருத்தி ஆணையகம்), மேலும் சுற்றுலாத்துறை, அந்நியசெலாவணி இருப்புகளை அதிகரித்து, நாட்டின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது. இருப்பினும், சுற்றுலாத்துறையானது நிலையானதாகவும் கொழும்பை தவிர்ந்த நாட்டின் பிற பகுதிகளிலும் உள்ள சமூகங்களுக்கு பயனளிப்பதாகவும் இருப்பதை உறுதி செய்வதற்கு அரசாங்கம் மேலும் பல நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இலங்கையை பன்முக கலாசார தலமாக சிறந்த முறையில் சந்தைப்படுத்துவதோடு, நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு போன்ற குறைவாக பார்வையிடப்படுகின்ற பிரதேசங்களுக்கான இலக்கிடப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதும், சிறிய விடுதிகள், உணவகங்கள், மற்றும் ஆரோக்கியமான பொருட்களின் உற்பத்தி போன்ற சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய சிறு வணிகங்களுக்கு தேவையான ஆதரவினை வழங்குவதும் மிகவும் அவசியமானவையாகும். மேலும், இவையனைத்தும் சீரான மற்றும் பரவலாக்கப்பட்ட சுற்றுலாத்துறையை உருவாக்குவதற்கு உதவும்.

மேலும், சுற்றுலாத்துறையினரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த, அண்மையில் அதிகரித்து வருகின்ற கும்பல் தொடர்பான வன்முறைகளை நிவர்த்தி செய்வது மிக முக்கியமானதாகும் (அபேரத்ன, 2025). சுற்றுச்சூழல், கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை நிலைமைகள், உட்கட்டமைப்பு மற்றும் சேவைகள், பயணம் மற்றும் சுற்றுலாத் தொடர்பான வளங்கள் மற்றும் ஸ்த்திரநிலை போன்ற சுற்றுலாத்துறை வளர்ச்சியின் அனைத்து முக்கிய துறைகளிலும் தரமற்ற செயல்திறன் காரணமாக, 2024 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய சுற்றுலாத்துறை அபிவிருத்தி குறிகாட்டியின் (Global Tourism Development Index) தரப்படுத்தலில் பின்தங்கிய நிலையிலுள்ளது. எனவே, பிராந்திய சுற்றுலா தலம் என்றவகையில் நாட்டின் போட்டித் தன்மையை அதிகரிக்க, அரசாங்கம் இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து முன்னேற்றத்திற்கான உத்திகளைச் செயல்படுத்தும் வகையில் முன்னோக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகின்றது.

### 4.3.2. விவசாயத்துறை

இலங்கையின் விவசாயத் துறை பொருளாதார ரீயாக இலாபமீட்ட முடியாத சிறு நிலங்கள், செயல்திறனற்ற பெருந்தோட்டங்கள், குறைந்த தொழில்நுட்பம், திறமையற்ற மனிதவளம் மற்றும் மூலதனப் பற்றாக்குறை போன்ற அம்சங்களால் வகைப்படுத்தப்படுகிறது. உள்ளீடுகள், உரங்கள், விலை ஆதரவு மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவற்றிற்கான விவசாய மானியங்கள் மற்றும் பாதுகாப்பு விதிமுறைகள் மூலம் மட்டுமே இக்குறித்த துறை பராமரிக்கப்படுகின்றது. இதில் முரண்பாடான விடயம் என்னவென்றால், இலங்கையின் தொழில் படையில் கால் பகுதியினர் விவசாயத் துறையில் சிக்குண்டுள்ளனர். இதற்கு காரணம் அந்தத் துறையே சிறந்த தெரிவாக இருப்பதனால் இல்லை, மாறாக விவசாயம் தவிர்த்து வெளியே போதிய தொழில் தெரிவுகள் இல்லாமையே ஆகும். மேலும், 1970களில் பெருந்தோட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தவறான நில சீர்திருத்தமானது, விவசாய செயல்திறன் மற்றும் விவசாய ஏற்றுமதிகளின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு பங்களித்ததோடு அமெரிக்க டொலரிலான உணவு இறக்குமதியில் (நெல் தவிர) அதிகம் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலைமைகள் பொருளாதார நெருக்கடியின் போது உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டிற்கு வழிவகுத்தன. 2022 ஆம் ஆண்டில், இலங்கை வெளிநாட்டுக் கடனுக்கு வட்டி செலுத்துவதா அல்லது தனது மக்களுக்கு உணவளிப்பதற்கு தேவையான உணவை இறக்குமதி செய்வதா என்ற 'ஹாப்சனின் தெரிவு' (Hobson's Choice) என்ற நிலையை எதிர்கொண்டது.

உணவுப் பாதுகாப்பு என்பது உணவு கிடைக்கும் தன்மை, குறைந்த விலை, தரம் மற்றும் பாதுகாப்பு, மற்றும் ஸ்த்திரத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் அளவிடப்படுகிறது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த அனைத்து அம்சங்களிலும், இலங்கை 2022 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய உணவுப் பாதுகாப்பு குறியீட்டின் (113 நாடுகளின் மத்தியில் 79வது இடம்) தரவரிசையில் மிகவும் மோசமான நிலையிலுள்ளது, இது உணவுப் பாதுகாப்பின் அடிப்படையில் நாடு ஆபத்தில் இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டுகின்றது. எதிர்காலத்தைப் பொறுத்தவரை, நவீன விவசாயம் மூலம் ஏற்றுமதியில் இருந்து அந்நியச் செலாவணியை

அதிகப்படுத்தக்கூடிய, போதுமான உள்நாட்டு உற்பத்தி மூலம் உணவுப் பாதுகாப்பை வழங்கும் திறமையான விவசாயத் துறையை உறுதி செய்வது புத்திசாலித்தனமாக இருக்கும். நில பயன்பாடு மற்றும் பயிர் கலவையை தொடர்பான முழுமையான மதிப்பாய்வு ஒன்றினை மேற்கொள்வது பயனளிக்கக்கூடியதாக இருக்கும்.

### 4.3.3. உற்பத்தித்துறை

ஒரு சாதகமான சூழலில், உற்பத்தியானது, நடுத்தர காலத்தில் அதிக வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும், நீண்ட காலத்திற்கு அதைத் தக்கவைத்துக்கொள்வதற்கும், இறுதியில் நாட்டை உயர் வருமான நிலைக்கு கொண்டு செல்வதற்கும் மிக முக்கியமானது. ஒரு சாதகமான சூழல் என்பது உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைந்து, "சிறிய சந்தை" பிரச்சினையை நிவர்த்தி செய்வதைக் குறிக்கின்றது. இத்தகைய ஒருங்கிணைப்பு, தொழில்துறைகளை விரிவுபடுத்தவும், பெரிய அளவிலான பொருளாதாரங்களில் முதலீடு செய்யவும் உதவுகின்றது. மேலும், இது சர்வதேச சந்தைகள் மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளை இலக்காகக் கொண்டு வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்க்கின்றது. வெளிநாட்டு நேரடி முதலீடு நாட்டிற்குள் மூலதனத்தை மட்டுமல்ல, தொழில்நுட்பம், முகாமைத்துவ நிபுணத்துவம், தொழில்முறை மற்றும் உள்ளீடு மற்றும் வெளியீட்டு சந்தைகளுக்கான அணுகலையும் கொண்டு வருகின்றது. இதனை ஏற்கின்ற நாட்டிற்கு (host country) கூடுதல் நன்மைகளை வழங்குகின்றது. சாத்தியமான துறைகள் உலகளாவிய மதிப்பு சங்கிலிகளில் இணையக்கூடியவை (எ.கா. பெறுமதி சேர்க்கப்பட்ட துணி மற்றும் ஆடைகள், பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் குறிப்பிட்ட சந்தையை குறிவைக்கின்ற உற்பத்தித் துறைகள் (வாகன உதிரிப்பாகங்கள், படகுகள் உற்பத்தி மற்றும் மின்னணு பொருட்கள்).

உற்பத்தி, விவசாயத் துறையில் புதுமை மற்றும் உற்பத்தித்திறன் வளர்ச்சியை மேம்படுத்துவதோடு, உள்நாட்டு விவசாயத்திலிருந்து அதிகப்படியான உழைப்பை மாற்றுவதற்கும் உதவுகிறது. உற்பத்தித்துறை, விவசாயத் துறையில் புத்தாக்கம் மற்றும் உற்பத்தித்திறன் வளர்ச்சியை மேம்படுத்துவதோடு, உள்நாட்டு விவசாயத்திலிருந்து ஊழிய நிரம்பலை வேறு தொழில்துறை நோக்கி மாற்றுவதற்கும் உதவுகின்றது. மேலும், இது சேவைத் துறை வளர்ச்சியை மேம்படுத்துகிறது, உற்பத்தி செயல்முறையின் போது பெறுமதி சேரக்கைகளை உருவாக்குகின்றது மற்றும் பொருளாதார வளர்ச்சியில் "வர்த்தகம் செய்ய முடியாத துறைகளைச் சார்ந்திருப்பதை'' தடுக்கின்றது. உற்பத்தித்துறையை திறம்பட ஆதரிப்பதற்கு, கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்கள் தடைகளை நீக்குவதிலும் போட்டித்தன்மையை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும். மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

- வணிக நடவடிக்கைகளுக்கு மிகவும் உகந்த சூழலை உருவாக்க விதிமுறைகள், நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் சீர்ப்படுத்துதல்.
- தடையற்ற தொழில்மயமாக்கல் செயல்முறை மற்றும் சர்வதேச போட்டித்தன்மையுடைய தொழில்கள் போன்றவற்றினைப் பராமரிப்பதற்கு, முதன்மை

மற்றும் இரண்டாம் நிலை உள்ளீடுகளை பெற்றுக்கொள்ளக்கூடியத் தன்மை, குறைந்த விலை மற்றும் தரம் போன்றவற்றினை உறுதி செய்தல்.

- டிஜிட்டல் மயமாக்கப்பட்ட செயல்முறைகள், வர்த்தகம் மற்றும் முதலீட்டு பாய்ச்சல்களை ஒழுங்குபடுத்த "ஒற்றை சாளர" அமைப்பை ஏற்றுக்கொள்வதன் மூலம் எல்லைக்கடந்த கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை சீர்திருத்துதல்.
- ஸ்த்திரத்தன்மையின் தரநிலைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் செயல்முறைகளை ஏற்பதன் மூலம் 21 ஆம் நூற்றாண்டின் தேவைகளுடன் தொழில்மயமாக்கலை சீரமைத்தல்.
- மிகவும் சமமான வளர்ச்சியை கட்டியெழுப்புவதற்கும் மூலோபாயத் தொழில்களை ஆதரிப்பதற்கும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனத்துறை, பிராந்திய தொழில்மயமாக்கல் மற்றும் இலக்கிடப்பட்ட தொழில் துறைகள் போன்ற முக்கியமான பகுதிகளில் அரசாங்கத்தின் பங்கை விரிவுபடுத்துதல்.

### 4.3.4. டிஜிட்டல் பொருளாதாரம்

இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரம் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருவதோடு, 2030 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12% பங்களிக்கக்கூடிய வாய்ப்புள்ளது. ஜனாதிபதியின் 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட உரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள படி, இந்தத் துறையின் மாற்றத்துக்குரிய அம்சம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பை வழங்குதல், இணையவழி அரசு சேவைகள் வழங்கலை விரிவுப்படுத்தல் (உ.தா., வரி சேகரிப்பினையும் சுங்க வருவாய் சேகரிப்பினையும் டிஜிட்டல் மயமாக்குதல்) மற்றும் கட்டமைப்புகள், பொருளாதாரம் முழுவதும் புத்தாக்கம், மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள், டிஜிட்டல் கட்டண முறைகளின்[4] பயன்பாடு போன்றவற்றினை மேம்படுத்துவதற்கான விதிமுறைகள் ஆகியவற்றின் மீதே தற்போதைய கவனம் இருக்கின்றது. அனைத்து மக்களுக்குமான டிஜிட்டல் விழிப்புணர்வு மற்றும் திறன்களை அதிகரித்தல் மற்றும் சிறந்த சைபர் பாதுகாப்பு முறைகளை[5] உருவாக்குதல் போன்றன டிஜிட்டல் பொருளாதார வளர்ச்சியின் பிற முக்கிய அம்சங்களாகும்.

[4] டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்கு ஒரு சமநிலையான களத்தை உருவாக்க, சிறந்த வணிக கழிவிடல் வீதம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த, வங்கிகள் மற்றும் கட்டண நுழைவாயில்களுடன் (மின்னணு நிதி பரிவர்த்தனைகளை மேற்கொள்ள உதவும் ஒரு தொழில்நுட்ப தளம்) இணைந்து அரசாங்கம் செயல்பட வேண்டும். தற்போது, இலங்கையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையில் 2.5% முதல் 3% வரை அதிக வணிக கழிவிடல் வீதங்கள் இருப்பதாக அறியப்படுகின்றது. பணப் பரிமாற்றங்களுடன் ஒப்பிடுகின்ற போது டிஜிட்டல் பரிவர்த்தனைகள் ஒப்பீட்டளவில் விலை உயர்ந்தவை என்பதே இதன் பொருளாகும்.

[5] செயற்கை நுண்ணறிவு போன்ற புதிய தொழில்நுட்பங்கள் அதிகரித்து வருவதையும், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் சைபர் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்ற இன்றைய உலகில் இது மிகவும் முக்கியமானது.

## 4.4. வறுமையைக் குறைப்பதற்கான கொள்கைகளை மேம்படுத்துதல்

இலங்கையின் பிரித்தானிய நலன்புரி அமைப்பு, பொது மருத்துவமனைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மூலமாக இலவச உலகளாவிய சுகாதாரப் பராமரிப்பையும், அரசுப் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மூலமாக உலகளாவிய கல்வியையும் வழங்கி வருகின்றது. இலங்கையில் ஜனசவிய மற்றும் சமுர்த்தி திட்டங்கள் உள்ளிட்ட கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. உலக வங்கியின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படுகின்ற அஸ்வெசும என்ற புதிய மானியத் திட்டமானது 2023 முதல் நடைமுறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. முந்தைய கொடுப்பனவு திட்டங்களில் காணப்பட்ட பலவீனங்களை கையாளுவதன் மூலமாக நெருக்கடிக்குப் பின்னரான வறுமை நிலையை நிவர்த்தி செய்வதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட, இலக்கிடப்பட்ட மற்றும் காலவரையறைக்குட்பட்ட இக்கொடுப்பனவுத் திட்டமானது, வங்கிப் பரிமாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட தளத்தினை பயன்படுத்தி செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 2 மில்லியன் மக்கள் பயனடைகின்ற அதே வேளை, நெருக்கடிக்குப் பின்னர் வறுமையால் பாதிக்கப்பட்ட 7 முதல் 10 மில்லியன் நபர்களுடன் ஒப்பிடுகின்ற போது, இந்த கொடுப்பனவினால் பயனடைகின்றவர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது.

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் (CEPA) அண்மைய ஆய்வுகள், அஸ்வெசும மானியத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள பயனாளிகளில் கொடுப்பனவினை பெற்றுக்கொள்வதற்கு தகுதியற்றவர்களை நீக்கி திட்டத்திற்குள் உள்வாங்கப்படாத தகுதியானவர்களை உள்ளடக்குவதன் மூலமும், இலக்கு துல்லியமின்மையைக் குறைக்க மிகவும் யதார்த்தமான பதிலிகளை (proxies) பயன்படுத்துவதன் மூலமும் அஸ்வெசும திட்டத்தினை மேலும் செம்மைப்படுத்த முடியும் என்பதை சுட்டிக்காட்டுகின்றன (CEPA, வரவிருக்கும் அறிக்கை). பொருளாதாரத்தில் விரைவான திருப்பம் மற்றும் விரைவான மீட்சியில் முன்னேற்றம் இருந்தபோதிலும், சமூக செலவினம் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் பின்தங்கியிருப்பதாக சர்வதேச நாணய நிதியம் (சர்வதேச நாணய நிதியம், 2025) குறிப்பிடுகின்றது.

ஒரு சிறந்த உலகில், பொருளாதார நெருக்கடி ஏற்படும் போது இலக்கிடப்பட்ட பணப் பரிமாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும், என்பதோடு தேவைப்படும் போது அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருளை பகிர்ந்தளித்தல் வேண்டும். குறித்த திட்டத்தில் பயனாளியாக இருப்பதற்கான தகுதியும் ஒரு தனித்துவமான அடையாளப்படுத்தல் முறையினைப் பயன்படுத்துவதன் மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும், மேலும் நலன்களை எதிர்பார்ப்பதையும் (rent-seeking) செயல்திறனின்மையையும் நீக்குவதற்காக, கொடுப்பனவுகள் நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு மாற்றப்படுதல் வேண்டும் (இந்தியாவில் UIDAI (ஆதார்) முறையைப் போல)[6]. வறியவர்களை இலக்காகக் கொண்டு, தகவல்கள் கசிவதைக்

[6] https://uidai.gov.in/en/

வறியவர்களுக்கான வங்கிக் கணக்குகளை விரிவுபடுத்துவதற்காக, ஒரு தனித்துவமான அடையாளப்படுத்தல் முறையை அறிமுகப்படுத்தக்கூடிய புதிய பணக்கொடுப்பனவு முறை ('அஸ்வெசும' சமூக நலத்திட்டம்) குறித்து உலக வங்கி தற்போது இலங்கையுடன் இணைந்து செயல்படுகின்றது.

நெருக்கடியால் ஏற்படும் வறுமையை நிவர்த்தி செய்வதற்கு ஒரு தனித்துவமான அணுகுமுறை தேவைப்படுகிறது, ஏனெனில் அது சாதாரண சூழ்நிலைகளில் நிலவுகின்ற வறுமையிலிருந்து கணிசமாக வேறுபடுகின்றது. இலங்கையில், நெருக்கடிக்கு முந்தைய வறுமை என்பது பிரதானமாக ஒரு "அபிவிருத்தி சார் பிரச்சினையாக" இருந்தது, இது முக்கிய அபிவிருத்தி செயல்முறையிலிருந்து தனிநபர்கள் ஒதுக்கப்படுவதிலிருந்து உருவானது. இதற்கு நேர்மாறாக, நெருக்கடியால் ஏற்படும் வறுமை என்பது ஒரு "பேரினப் பொருளாதாரப் பிரச்சினை" ஆகும், இது பொருளாதார உறுதியற்ற தன்மை, அதாவது கடன் இயல்புநிலை, பணவீக்கம், வட்டி விகித உயர்வுகள் மற்றும் நாணய மதிப்பு இறக்கம் - மற்றும் பொருளாதார சுருக்கம் போன்ற காரணிகளால் தூண்டப்படுகிறது, இதன் விளைவாக வணிகங்கள் மூடப்படுவதோடு, வேலை இழப்புகள் ஏற்பட்டு வாழ்வாதாரங்கள் மற்றும் வருமானங்கள் வீழ்ச்சியடைகின்றன. மேலும், நெருக்கடிக்கான உடனடி கொள்கை நடவடிக்கைகள், தற்செயலாக வறுமையை அதிகப்படுத்தி, அதன் தாக்கத்தைக் குறைக்கும் முயற்சிகளை மேலும் சிக்கலாக்கியுள்ளன.

இந்த வேறுபாடு, சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் மட்டுமே நெருக்கடிக்குப் பின்னர் ஏற்படுகின்ற வறுமையை திறம்பட நிவர்த்தி செய்ய முடியாது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, ஏனெனில் இவை தற்காலிக நிவாரணத்தை மட்டுமே வழங்குகின்றன. இதற்கு பதிலாக, நீடித்த வளர்ச்சி வேகத்தை அடைவதிலும் அதனை நிலைநிறுத்துவதிலும் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வருமான ஈட்டுவதை ஊக்குவிப்பதன் மூலம், இத்தகைய வளர்ச்சி நீண்ட பொருளாதார மீட்சியை ஊக்குவிப்பதற்கும் நெருக்கடியால் ஏற்படும் வறுமையைப் போக்குவதற்கும் மூலக்கல்லாக அமைகின்றது.

# 5. சீர்த்திருத்தங்களை செயல்படுத்துவதற்கான முக்கிய படிப்பினைகள்

நாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள சில பொருளாதாரக் கொள்கைகளின் முக்கியத்துவம் குறித்து நாம் அறிந்திருக்கின்றோம். இருப்பினும், இலங்கையில் பொருளாதர வளர்ச்சியின் வரலாற்றினை உற்று நோக்கும் போது, பொருளாதாரக் கொள்கைகள் பகுதியளவிலும் சீரற்ற முறையிலும் செயல்படுத்தப்பட்டிருப்பதை காண முடிகின்றது. இவை இலங்கையின் வளர்ச்சி செயல்திறனைக் கட்டுப்படுத்துவதாகவே அமைந்துள்ளன. இந்தப் பிரிவில் 1 முதல் 5 வரையான வளர்ச்சிக் கொள்கைகளை நடைமுறயில் கொண்டு வருவதற்கான 6 ஆவது கொள்கைப் பகுதியான அரசியல் ஒருமித்த கருத்தையும் அரச திறனையும் எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்து கலந்துரையாடப்படவுள்ளது. முழுமையானதும் பயனுள்ளதுமான கொள்கை செயல்படுத்தல் இல்லாமை பெரும்பாலும் பின்வரும் காரணிகளால் ஏற்படுகின்றது:

(அ) பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்ப அரசியல் ஒருமித்த கருத்து இல்லாமை,

(ஆ) பலவீனமான அரச திறன் மற்றும் அரசியல் ஊக்குவிப்புகள், மற்றும்

(இ) திட்டம் குறித்த கண்காணிப்பு இல்லாமை.

## 5.1 அரசியல் ஒருமித்த கருத்து இல்லாமை

இலங்கையில் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான ஆணிவேர் தெளிவானதும் நிலையானதுமான வளர்ச்சி மூலோபாயம் குறித்த அரசியல் ஒருமித்த கருத்து இல்லாததே என்பதை நாட்டின் அரசியல் பொருளாதாரம் குறித்த கண்ணோட்டம் எடுத்துகாட்டுகின்றது. 1960களில் இருந்து பொருளாதார உறுதியற்ற தன்மை மற்றும் நிச்சயமற்ற தன்மையை உருவாக்கிய தொடர்ச்சியான கொள்கை மாற்றங்கள் சுழற்சி அடிப்படையில் மீண்டும் மீண்டும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இலங்கை 1960கள் மற்றும் 1970களில் இறக்குமதி மாற்றுக் கொள்கைகளைப் பின்பற்றியது. இது, சுயநலத்தினால் தூண்டப்பட்ட சீர்திருத்தங்கள் குறித்த அரசியல் ஒருமித்த கருத்து இல்லாததால் ஏற்பட்டிருக்கலாம், பல ஆண்டுகளாக “1956 புரட்சி” க்குப் பிறகு தோன்றியவர்களிடையே ஒரு பதற்றம் நிலையை தோற்றுவித்ததோடு உள்நோக்கிய தேசியவாத சிந்தனைக் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்தது. இதன் விளைவாக, குறைந்த முதலீடு, குறைந்த வளர்ச்சி மற்றும் உயர் வேலையின்மை போன்றவற்றைக் கொண்ட ஒரு பொருளாதாரம் தோற்றம் பெற்றது. கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள அண்டை நாடுகளின் பொருளாதார வெற்றியை இலங்கையால் பிரதிபலிக்க முடியவில்லை என்பதையே இது சுட்டிக்காட்டுகின்றது.

1977 காலப்பகுதியில் நாடு பொருளாதார சீர்திருத்தம் ஒன்றுக்கு தயாரானது. 1977 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் விளைவாக, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் சர்வதேச வர்த்தகம் மற்றும் சந்தைகளை நோக்கிய பொருளாதாரத்தை உருவாக்க விரிவான கொள்கை சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் என உறுதியளித்தது. அத்தகைய கொள்கை

சீர்திருத்தங்களின் தொகுப்பில் வர்த்தக தாராளமயமாக்கல் கொள்கை, நிதிக் கொள்கை சீர்திருத்தம், விலைக் கட்டுப்பாடுகளை நீக்குதல், நிதி தாராளமயமாக்கல், அரச நிறுவன சீர்திருத்தம் மற்றும் தொழில்துறை கொள்கை சீர்திருத்தம் ஆகியவை உள்ளடங்கும். 1977 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை சீர்திருத்தங்கள், மிகவும் பொருத்தமான ஊக்குவிப்புகளை உருவாக்குவதிலும், தனியார் துறை வளர்ச்சிக்கான கட்டமைப்பை வலுப்படுத்துவதிலும் கவனம் செலுத்தின. உள்நாட்டு சந்தைக்கான உற்பத்தியில் இருந்து ஏற்றுமதிக்கு முக்கியத்துவம் கொடுப்பதே இதன் நோக்கமாக இருந்தது. இருப்பினும், தயாரிப்பு மற்றும் காரணி சந்தைகளில் (உ.தா., நிலம், ஊழியம், மூலதனம்) கட்டமைப்பு சீர்திருத்தங்களை தீவிரப்படுத்த அரசியல் விருப்பம் இல்லாததால் (உ.தா., அரசிற்கு சொந்தமான நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு போட்டித்தன்மை போன்றவற்றுக்கான சீர்திருத்தங்கள்) சீர்திருத்தங்களுக்கான ஊக்குவிப்பு விரைவில் நிறுத்தப்பட்டது. உண்மையில், பல தசாப்தங்களாக நாட்டின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான மூலோபாயங்கள் குறித்து ஒருமித்த கருத்து இல்லாததும் தற்போதைய பொருளாதார இக்கட்டான சூழ்நிலைக்கு பங்களித்தது எனலாம்.

தேசிய பொருளாதார வளர்ச்சிக்கான புதிய 5 ஆண்டு தொலைநோக்குப் பார்வை குறித்து அரசியல் கட்சிகள், வணிக அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் குடியியல் சமூகத்தினரிடையே ஒருமித்த கருத்து எட்டப்படுதல் வேண்டும் (குமாரசாமி மற்றும் விக்னராஜா, 2023). ஆய்வு நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களால் இணைந்து நடத்தப்படும் மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் போன்றன, நிச்சயமற்ற உலகப் பொருளாதாரத்தில் உள்நோக்கிய மற்றும் வெளிநோக்கிய கொள்கைகளின் நன்மைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி மற்றும் மாற்றத்திற்கான நம்பகமான ஆதாரங்கள் என்ன என்பது குறித்த வெளிப்படையான கலந்துரையாடல்களை எளிதாக்குகின்றன. அடுத்த தசாப்தத்திற்கான புரிந்துகொள்ளக்கூடிய தேசிய பொருளாதார அபிவிருத்தி குறித்த தொலைநோக்கு ஆவணமாக உடன்டிக்கையின் பகுதிகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும், அவை பின்வருமாறு அடிகோடிட்டுக் காட்டப்படுதல் வேண்டும்:

- பொருளாதார அபிவிருத்தியினால் அடைந்துகொள்ளப்பட்ட சாதனைகளும் தோல்விகளும்
- முதலீடு மற்றும் உற்பத்தித்திறன் மாற்றம் உள்ளடங்களாக, பொருளாதார அபிவிருத்திக்கான யதார்த்தமான இலக்குகள்
- வெளிப்புற போக்குடைய, சந்தைக்கு ஏற்ற கொள்கை செயற்பாட்டுத் திட்டம்
- செயல்படுத்துவதில் காணப்படுகின்ற இடர்பாடுகள்

பொருளாதார வளர்ச்சிக்கான தேசிய தொலைநோக்குப் பார்வை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த, நாடு முழுவதும் தொலைநோக்குப் பார்வை நடவடிக்கைகள் நடத்தப்படுதல் வேண்டும். தென் கொரியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம், ஐக்கிய அரபு இராஜ்ஜியம் மற்றும் இந்தியா போன்ற நாடுகள் பொருளாதாரத்தில் வெற்றிப்பெற்றக் கதைகள் பெரும்பாலும் மேற்கோள் காட்டப்படுகின்றன, அவை பொருளாதார வளர்ச்சிக்கான தேசிய தொலைநோக்குகளை வடிவமைத்து செயல்படுத்துவதில் அனுபவ ரீதியான பாடங்களை வழங்குகின்றன.

## 5.2. பலவீனமான அரச திறன்

முக்கியமான பொருளாதார சீர்திருத்தங்களைச் செயல்படுத்தத் தேவையான சட்டவாக்கம், தொழில்நுட்பத் திறன் மற்றும் சிறந்த மேற்பார்வை போன்றன கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடங்களாகும்.[7] மேலோட்டமாக பார்த்தால், அண்மையான பல பாராளுமன்றங்கள் கலவையான அனுபவங்களையே கொண்டுள்ளன. இலங்கையில் அண்மைக்காலங்களில் பாராளுமன்றங்களில் முதன்முறையாக தெரிவுசெய்யப்பட்ட, முன் அனுபவம் எதுவுமில்லாத உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போக்கு காணப்படுவதாக சிலர் விமர்சிக்கின்றனர். இது, நாட்டிற்கு மிக அவசியமான பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த தேவையான சட்டம் மற்றும் தொழில்நுட்ப திறன்கள் குறித்த கவலைகளை எழுப்பியுள்ளது. மேலும், சிவில் சேவைகளுக்காக பல்வேறு துறைகளைச் சேர்ந்த பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு, அவர்கள் பணியில் இருக்கும் போதே அவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கி, நடுத்தர தொழில் வல்லுநர்களுக்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பொருளாதாரம் மற்றும் அதனோடு தொடர்புடைய பாடங்களில் பட்டப்படிப்பைத் தொடரவும், குறுகிய கால பயிற்சி மூலம் தொடர்ச்சியான கற்றலை மேற்கொள்ளவும் வாய்ப்புகளை வழங்குகின்றது, இது நிறுவனத்தின் தொழில்நுட்ப திறனை மேம்படுத்தி தொழில் முன்னேற்றத்தை அடைந்துகொள்ள பெரிதும் உதவுகின்றது. இருப்பினும், வெளிநாட்டில் பலகலைக்கழங்களில் பட்டப்படிப்பினை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பினை ஆதரிக்கும் இந்த நடைமுறை பல அரசு நிறுவனங்களுக்குப் பொருந்தாது. ஏனெனில், முறையான பயிற்சியை வழங்க அரசு நிறுவனங்கள் (போதுமான நிதி மற்றும் பீடங்கள் இல்லாதிருக்கலாம்) அல்லது நன்கொடையாளர் நிதியுதவியுடன் கூடிய தற்காலிக குறுகிய கால கற்கைநெறிகளை பெரிதும் நம்பியிருக்கின்ற நிலையே இங்கு காணப்படுகின்றது.

எனவே, அரசாங்கம் பொதுத்துறை சேவை வழங்கலுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும், அரசுத் துறையில் முக்கிய திறமையாளர்களைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும், மேலும் நிர்வாகம் மற்றும் பொது நிர்வாகத்தில் நிபுணத்துவத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் கொள்கைகளை உருவாக்க வேண்டும். சந்தை சார்ந்த பொதுக் கொள்கைகளை மேற்கொள்வதற்கு மேம்படுத்தப்பட்ட திட்டமிடல், பொது சேவைகளை டிஜிட்டல் மயமாக்குதல், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களின் சிக்கல்களைப் புரிந்துகொள்வது போன்றன மிகவும் முக்கியமானவையாக காணப்படுகின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட நிர்வாகிகளின் திறனை மேம்படுத்துவதற்கு, ஒரு அதிநவீன பொதுக் கொள்கை பயிற்சி நிறுவனத்தை நிறுவுவதானது இலங்கையின் பல்கலைக்கழக வலையமைப்பிற்கு மேலும் மதிப்பினை சேர்ப்பதாக இருக்கும்.

7 ஆச்சரியம் என்னவெனில், இலங்கையில் பொதுக் கொள்கை முகாமைக்கான அரசின் திறனின் செயல்திறன் குறித்து மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளில் வனசிங்க மற்றும் குணரத்ன (1996) ஆகியோரால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வினைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

## 5.3. வரையறுக்கப்பட்ட திட்ட கண்காணிப்பு

இலங்கையில் உள்ள பெரும்பாலான அபிவிருத்தி திட்டங்கள், தயார்நிலை இல்லாமை, கொள்முதல்களில் ஏற்பட்ட தாமதம், ஒப்பந்தக்காரர்களின் மோசமான செயல்திறன், மூன்றாம் தரப்பினரின் அனுமதியைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம், போதுமான ஒதுக்கீடுகள் இல்லாமை, கடன் வழங்கல்களை நிறுத்தி வைத்தல் மற்றும் மோசமான திட்ட முகாமை போன்ற பல்வேறு காரணங்களால், அவற்றின் பலன்களை பொதுமக்களுக்கு சரியான நேரத்தில் வழங்குவதற்குத் தவறிவிட்டன என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். அபிவிருத்தித் திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகளை உறுதி செய்வதற்காக, அரசாங்கத்தின் உயர் மட்டங்களில் உள்ள அதிகாரிகள் அதனை அங்கீகரிக்க வேண்டும். ஒரு பலமான தலைவர் அல்லது அரசியல் தலைவருக்கு செயல்முறையை முன்னோக்கி நகர்த்தும் திறன் இருக்கும். இதில் அமைச்சுகள், உயர் மட்ட அதிகாரிகள் மற்றும் பல்வேறு பங்குதாரர்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு இன்றியமையாதது ஆகும்.

திட்ட கண்காணிப்பு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்ற திட்டங்களுக்கு மிக முக்கியமானது, ஏனெனில் இது பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் திறமையான வள ஒதுக்கீட்டினை போன்றவற்றை உறுதி செய்கின்ற அதே நேரத்தில், கட்டமைப்பு முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், சிக்கல்களை அடையாளம் காணவும், தகவலறிந்த முடிவுகளை எடுக்கவும் உதவுகின்றது, இறுதியாக சிறந்த திட்ட முடிவுகளையும் பொது நம்பிக்கையை அதிகரிக்கவும் வழிவகுக்கின்றது.

பெரும்பாலான திட்ட முகாமைத்துவ முறைகள், திட்டங்கள் செயல்படுத்தப்படும் பல்வேறு செயல்முறைகளை உள்ளடக்கியுள்ளது. திட்ட முகாமைத்துவ முறைகள் தொடர்பான செயல்முறையை ஐந்து முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையான, ஆரம்பித்தல், திட்டமிடுதல், செயல்படுத்துதல், கண்காணித்தலும் கட்டுப்படுத்துதலும் மற்றும் நிறைவு செய்தல் போன்றனவாகும். ஒவ்வொரு வகையும் பல தனித்தனி செயல்முறைகளைக் கொண்டுள்ளது. பெரும்பாலும், ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் தகவல்களைப் புதுப்பிக்க அல்லது சேர்க்க இது தேவைப்படுகின்றது. திட்ட முகாமைத்துவம் என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும், இதற்கு முன்னர் செய்யப்பட்ட வேலையில் பொருத்தமான மாற்றங்கயை மேற்கொள்ளவும் இறுதி நோக்கங்கள்/இலக்குகளுக்கு ஏற்ப திட்டமிடவும் அவசியமாகின்றது. மேலும், திட்ட பரப்பு முகாமைத்துவமானது, திட்டத் தயாரிப்பினை உருவாக்குவதற்கும் அதன் வெற்றிகரமான நிறைவு செய்வதற்கும் தேவையான செயல்பாடுகளை அடையாளம் கண்டு உட்சேர்ப்பதை உறுதி செய்யும் நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றது.

## 5.4. திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதற்கான முக்கிய நடவடிக்கைகள்

அட்டவணை ES1 இல் பரிந்துரைக்கப்பட்ட சீர்த்திருத்தங்களை திறம்பட செயல்படுத்துவதை ஆதரிக்கக்கூடிய நிறுவனரீதியான புத்தாக்கங்கள் குறித்து இந்தப் பிரிவு விவாதிக்கின்றது.

- கொள்கை வகுப்பின் நிலைத்தன்மை மற்றும் முற்கூட்டியே கணிக்கக்கூடியத் தன்மையை மேம்படுத்துவதற்கும், செயல்படுத்துவதற்கும் அதேபோல முன்னுரிமை மற்றும் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதற்கும், ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் அபிவிருத்தி அமைச்சுகளின் செயலாளர்கள் குழு ஒன்றினை நிறுவுதல்.

- அனைத்து கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் திட்டங்களைக் கண்காணித்து, அவற்றை சரியான நேரத்தில் செயல்படுத்துவதையும், விரும்பிய இலக்குகளை அடைவதையும் உறுதி செய்வதற்காக, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளரின் மேற்பார்வையின் கீழ், ஜனாதிபதி செயலகத்தில் ஒரு தேசிய செயல்பாட்டு அறை (NOR) அல்லது கொள்கை செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்புப் பிரிவை (PIMD) நிறுவுதல்.

- தேசிய பொருளாதார முன்னுரிமைகளுக்கு ஏற்ப திட்டங்களை உள்வாங்குவதற்கு கடுமையான செயல்முறையை அமைத்தல். மக்களின் தேவைகளுக்கு ஏற்ப, அதிக முன்னுரிமையுடைய திட்டங்கள்/பெரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களைத் தேர்ந்தெடுத்து, திட்டங்களை பயனுள்ள வகையில் திறம்பட செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, பிராந்திய அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து அதனை மேற்பார்வை செய்ய, கௌரவ பிரதமர் அல்லது சிரேஷ்ட அமைச்சர் தலைமையில் ஒரு உயர் மட்டக் குழுவை நியமித்தல் வேண்டும். அத்தகைய திட்டங்கள் பின்வருமாறு:

    - பரவலாக்கப்பட்ட மூலதன வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.
    - அமைச்சரவை அமைச்சுகளால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.
    - மாகாண சபைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.
    - வெளிநாட்டு நிதியுதவி திட்டங்கள்.

- குறிப்பு: ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் இந்த உயர்மட்டக் குழுவின் செயலாளராகவும், ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுவார்.

- முன்னுரிமை அளிக்கப்பட்ட பெரிய அளவிலான திட்டங்களின் (ரூ. 1000 மில்லியனுக்கும் அதிகமான) முன்னேற்றத்தைக் கண்காணிக்க, அவை சரியான நேரத்தில் செயல்படுத்தப்படுவதையும் விரும்பிய இலக்குகள் அடையப்படுவதையும் உறுதி செய்வதற்காக, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் தலைமையில் ஒரு திட்ட

கண்காணிப்புக் குழுவை நிறுவுதல். இந்த சிரேஷ்ட அதிகாரிகள் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் பின்வருமாறு:

- பணிப்பாளர் நாயகம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்.
- பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்.
- பணிப்பாளர் நாயகம், திட்ட முகாமை மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்.
- பணிப்பாளர் நாயகம், தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்.
- பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயல்பாடுகள் திணைக்களம்.

- குறிப்பு: ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ஒருவர் ''திட்ட கண்காணிப்புக் குழுவின்'' செயலாளராகவும், ஒருங்கிணைப்பாளராகவும் செயற்படலாம்.

கடந்த ஆண்டுகளில் மூலோபாய வர்த்தகம் மற்றும் முதலீட்டு முயற்சிகளில் ஈடுபட்டிருந்த அரச உத்தியோகத்தர்கள், நிறுவன ரீதியான முன்னனுபவங்கள், தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் நடைமுறை புரிதல்களைக் கொண்டிருப்பதால், சிவில் சேவை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து அவர்கள் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டிருத்தல் வேண்டும். (ஒரு ஸ்மார்ட் எதிர்காலத்திற்கான மையம், CSF கொள்கை குறிப்பு 15 ஏப்ரல் 2025).

நாட்டில் காணப்படுகின்ற நிபுணத்துவத்தை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதோடு, கலந்துரையாடல் மற்றும் ஆலோசனைக்கான உள்ளடக்கிய மற்றும் வெளிப்படையான செயல்முறையை உறுதி செய்தல் வேண்டும். ஆலோசனைக் குழுக்கள் மற்றும் சிறப்புப் பணிக்குழுக்கள் நியமிக்கப்படும்போது, சம்பந்தப்பட்ட துறைகளில் உள்ள அனைத்துத் பிரிவுகளையும்/பங்குதாரர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும். அனைத்துக் குழுக்கள் மற்றும் பணிக்குழுக்களும், காலவரையறைக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் மற்றும் உரிய அதிகாரிகளுக்கு அவ்வப்போது சமர்ப்பிக்க வேண்டிய முன்னேற்ற அறிக்கையுடன் கூடிய பணிக் குறித்த விதிமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். (சிறந்த நடைமுறை திட்ட கண்காணிப்பு பற்றிய மேலதிக விவரங்களுக்கு பின்னிணைப்பைப் பார்க்கவும்).

# 6. முடிவுரை

இலங்கை ஒரு நெருக்கடியான சூழ்நிலைக்கு முகங்கொடுத்து வருவதை உலக நாடுகள் கவனித்துக் கொண்டிருக்கிறன. இதன் மத்தியில் தற்போதைய புதிய அரசாங்கம் ஒரு நம்பிக்கைக்குரிய தொடக்கத்தை உருவாக்கியுள்ளது. பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க ஸ்த்திரத்தன்மை ஏற்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத் திட்டம் சரியான பாதையில் அமுல்படுத்தப்பட்டு வருவதோடு, கடன் மறுசீரமைப்பு குறித்த சிக்கலான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேற்குறிப்பிப்பட்ட எல்லாவற்றிற்கும் மேலாக, சட்டங்களில் பொதிந்துள்ள தெளிவான கட்டமைப்புகளுடன் கூடிய பாரிய பொருளாதாரக் கொள்கை வகுப்பிற்கான ஒரு புதிய முன்னுதாரணத்தை காண முடிகின்றது. நிதி விதி முறைகள் கடுமையாக்கப்பட்டுள்ளதோடு, இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள அதிக சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் நாணயக் கொள்கையில் முற்கூட்டிய நிதி கட்டுப்பாடுகளுக்கான வழிகள் நீக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய ஆட்சியின் கீழ், நாணய மாற்று விகிதம் நெகிழ்வான முறையில் முகாமை செய்யப்படும். மீண்டும் மீண்டும் ஏற்படக்கூடிய பேரினப் பொருளாதார அழுத்தங்கள் கடந்த காலத்தில் ஏற்பட்ட ஒரு விடயமாகவே இருக்கும் என நம்புகின்றோம். மிகவும் அவசியமான வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கு இறையாண்மை மதிப்பீடு மற்றும் வணிக நம்பிக்கையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம்.

இருப்பினும், உலகப் பொருளாதாரம் நிச்சயமற்றதாக இருக்கின்ற சந்தர்ப்பங்களில், உள்ளடக்கிய மற்றும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வளர்ச்சியை அடைந்து கொள்வதில் இன்னும் கடுமையான சவால்கள் காணப்படுகின்றன. பொருளாதாரத்தை மாற்றியமைப்பதற்கும், உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு அதனை வலுப்படுத்துவதற்கும், பன்முகப்படுத்துவதற்கும், அதனூடாக அடுத்த ஐந்து ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சியை 3% இலிருந்து நிலையான 5% ஆக உயர்த்துவதற்கும் தேவையான கட்டமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்ள பாரிய அணுகுமுறை ஒன்று (big-bang approach) அவசியமாகின்றது. 2027/28 ஆம் ஆண்டில் கடுமையான சிக்கன நடவடிக்கைகளுடன் கூடிய, மற்றுமொரு கடன் மறுசீரமைப்பைத் தவிர்க்க, 5% பொருளாதார வளர்ச்சியை அடைவதானது குறைந்தபட்சம் அவசியம் என நாங்கள் நினைக்கின்றோம். வறுமை மற்றும் பாதிப்புகளின் தீவிரமான அதிகரிப்பை மாற்றியமைப்பதில் கணிசமான முன்னேற்றத்தை ஏற்படுத்த வளர்ச்சியின் வேகத்தை அதிகரிப்பது அவசியமாகின்றது. இதற்கு, பொருளாதார மாற்றச் சட்டத்தை (திருத்தங்களுடன்) செயல்படுத்துவதற்கான வரவுசெலவுத் திட்ட சமர்ப்பில் உள்ள உறுதிமொழியை உடனடியாக அமல்படுத்த வேண்டும். இந்த வளர்ச்சித் திட்டம் இதை திறம்படச் செயற்படுத்துவதற்கான பாதைகளை கோடிட்டுக் காட்டுகின்றது. மேலும், திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதற்கான அரச திறனை வளர்ப்பதையும் இது ஆதரிக்கின்றது.

வெற்றிகரமான விளைவுகளை அடைந்து கொள்வதற்கு, நடைமுறை ரீதியான தலைமைத்துவம், துணிச்சலான கொள்கை முடிவுகள், இலங்கையின் எதிர்கால அபிவிருத்திக்கான தெளிவான பார்வை மற்றும் அபவிருத்தி பங்காளர்களின் ஆதரவு முக்கியமாகின்றது. இத்தகைய தலைமைத்துவத்தின் ஊடாக, மாற்றமடையக்கூடிய வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப்

புரிந்துகொண்டு, மற்றுமொரு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் நாடு சிக்கிக்கொள்வதை தவிர்க்க வேண்டிய நேரம் இதுவாகும்.

# உசாத்துணை


**Abeyratne, S.** (2023) 'Economic crisis in Sri Lanka: the way-in and the way-out'. *Sri Lanka Economic Journal* 20: 1–16

**Abeyratne, S.** (2025) 'Tourism: perils of playing it by ear!' Sunday Times, 30 March (www.sundaytimes.lk/250330/business-times/tourism-perils-of-playing-it-by-ear-2-593418.html).

**Amarasekara, C. and Venuganan, P.** (2021) 'Comparative review of the human capital development journeys of Vietnam and Sri Lanka'. *Vietnam Journal for Indian and Asian Studies* 9(106): 14–27.

**Athukorala, P.** (2025) 'The Sri Lankan economy: from optimism to debt trap'. Working Paper 2025-1-3. Tokyo: Japan Center for Economic Research.

**Basu, K.** (2022) 'Why Sri Lanka imploded., Project Syndicate, 20 July (www.project-syndicate.org/commentary/sri-lanka-why-it-has-collapsed-by-kaushik-basu-2022-07).

**Breuer, P. and Woldemichael, M. T.** (2025) 'Sri Lanka's economic reform program is delivering—keep going for a full recovery'. IMF Op-Ed, 25 March (www.imf.org/en/News/Articles/2025/03/25/032525-breuer-and-woldemichael-oped-sri-lanka-economic-reform-program-is-delivering).

**CEPA – Centre for Poverty Analysis** (forthcoming) 'Crisis-driven poverty dynamics in Sri Lanka'. Colombo: CEPA.

**Coomaraswamy, I. and Wignaraja, G** (2023) 'What can we learn from Sri Lanka's debt default?' LSE Blog, 16 October (https://blogs.lse.ac.uk/southasia/2023/10/16/what-can-we-learn-from-sri-lankas-debt-default/).

**CSF – Centre for a Smart Future** (2025) 'Responding to global economic challenges: eight priority trade and competitiveness reforms for Sri Lanka'. Policy Note, 15 April (www.csf-asia.org/wp-content/uploads/2025/04/CSF-Policy-Note_Eight-Priority-Trade-and-Competitiveness-Reforms-Sri-Lanka_15042025.pdf).

**Devarajan, S.** (2025), 'Accountability: the key to sustained and inclusive growth in Sri Lanka' in G. Wignaraja and D.W. te Velde (eds) *Sri Lanka: from debt default to transformative growth. Second edition*. London: ODI Global.

**East Asia Forum** (2023) 'In Sri Lanka, economic necessity collides with political reality'. East Asia Forum, 18 December (https://eastasiaforum.org/2023/12/18/in-sri-lanka-economic-necessity-collides-with-political-reality/).

**Fitch Ratings** (2025) 'Sri Lanka's revenue raising drive key to credit profile'. 19 February (www.fitchratings.com/research/sovereigns/sri-lankas-revenue-raising-drive-key-to-credit-profile-19-02-2025).

**Gunatilake, H.** (2024) 'Growth and poverty in Sri Lanka: updates on the nexus'. Daily Mirror, 5 June (www.dailymirror.lk/features/Growth-and-poverty-in-Sri-Lanka-Updates-on-nexus/185-284105).

**IMF – International Monetary Fund** (2025) 'IMF Executive Board completes the Third Review under the Extended Fund Facility Arrangement with Sri Lanka'. Press Release 25/053 (www.imf.org/en/News/Articles/2025/02/28/pr25053-sri-lanka-imf-completes-the-3rd-rev-under-the-eff).

**Isenman, P.** (1980) 'Basic needs: the case of Sri Lanka'. *World Development* 8: 237–258.

**Kaluarachchi, S., Jayathilaka, R. and Rehman, S.** (2024) 'Unveiling Sri Lanka's brain drain and labour market pressure: a study of macroeconomic factors on migration'. PLoS One 11: 19(3): e0300343 (https://pmc.ncbi.nlm.nih.gov/articles/PMC10927103/).

**Kelegama, S.** (2000) 'Development in independent Sri Lanka: what went wrong?' Economic and Political Weekly 35(17), 22–28 April.

**Kojima, K.** (2000) 'The "flying geese" model of Asian economic development: origin, theoretical extensions, and regional policy implications'. Journal of Asian Economics 11(4): 375–401.

**Macmillan, M. Page, J. Booth, D. and te Velde, D.W.** (2017) 'Supporting economic transformation: an approach paper'. London: ODI.

**Mendez-Parra, M., Ayele, J. and Wignaraja, G.** (2025) 'The impact of tariff removal in proposed FTAs for Sri Lanka' in G. Wignaraja and D.W. te Velde (eds) (2025) *Sri Lanka: from debt default to transformative growth*. London: ODI Global.

**Ministry of Finance, Economic Stabilisation and National Policies** (2024) 'Sri Lanka reaches debt restructuring agreements in principle with external creditors on approximately US$ 17.5 bn of sovereign debt'. Press Release, 19 September (www.treasury.gov.lk/api/file/16dc614c-d9a9-47ff-94d6-aab0811e62ba).

**NPP – National People's Power** (2024) 'A thriving nation – a beautiful life'. (www.npp.lk/up/policies/en/npppolicystatement.pdf).

**Parliament of Sri Lanka** (2025) 'Hon. President Anura Kumara Dissanayake presents the Budget 2025 to Parliament in his capacity as the Minister of Finance', 17 February (www.parliament.lk/news-en/view/4374).

**Smith, G.** (2025), 'The evolution of Sri Lanka's debt crisis: lessons for better borrowing' in G. Wignaraja and D.W. te Velde (eds) (2025) *Sri Lanka: from debt default to transformative growth*. London: ODI Global.

**Sri Lanka Bureau of Foreign Employment** (2024) 'The number of individuals who have gone abroad for employment exceeds 300,000' (www.slbfe.lk/slbfe-news/the-number-of-individuals-who-have-gone-abroad-for-employment-exceeds-300000/).

**Sri Lanka Tourism Development Authority** (2024) 'Weekly report (December 2024) weekly tourist arrivals' (www.sltda.gov.lk/storage/common_media/WeeklyReportDECEMBER-01-31.pdf).

**Takada, S.** (2025) 'Japan must remain vigilant as Trump 2.0 looms'. East Asia Forum, 11 January (https://eastasiaforum.org/2025/01/11/japan-must-remain-vigilant-as-trump-2-0-looms/).

**UNDP – United Nations Development Programme** (2023) 'Understanding multidimensional vulnerabilities: impact on people of Sri Lanka'. Developed with OPHI (www.undp.org/srilanka/mvi).

**Wanasinghe, S. and H. Gunaratna** (1996), 'Enhancing the effectiveness of public policy management: the challenge for Sri Lanka'. Research Studies Governance Series 3. Colombo: Institute of Policy Studies.

**Weerasinghe, P.N.** (2021) 'Sri Lanka's macro-financial developments: issues and challenges in structural transformation and lessons from China's Experience'. UNCTAD, June (https://unctad.org/system/files/official-document/BRI-Project_RP13_en.pdf).

**Weerasinghe, P.N., Amarasekera, C. and Jegajeevan, S.** (2025) 'Disinflating an economy in crisis: the case of Sri Lanka' in G. Wignaraja and D.W. te Velde (eds) *Sri Lanka: from debt default to transformative growth. Second edition*. London: ODI Global.

**Wignaraja, G.** (2024a) 'Sri Lanka's new outsider president in with a chance'. East Asia Forum, 2 October (https://eastasiaforum.org/2024/10/02/sri-lankas-new-outsider-president-in-with-a-chance/).

**Wignaraja, G.** (2024b) 'Sovereign default and economic crisis in Sri Lanka: causes and policy lessons'. Institute of South Asian Studies South Asia Scan, 30 April (www.isas.nus.edu.sg/papers/sovereign-default-and-economic-crisis-in-sri-lanka-causes-and-policy-lessons/).

**Wignaraja, G. and Kripalani, M.** (2024) 'How India and Sri Lanka can go from aid to trade'. Indian Express, 17 December (https://indianexpress.com/article/opinion/columns/india-sri-lanka-aid-trade-9729776/).

**Wignaraja, G. and te Velde, D.W.** (eds) (2025) *Sri Lanka: from debt default to transformative growth. Second edition*. London: ODI Global.

**World Bank Group** (2023) *Macro poverty outlook country-by-country analysis and projections for the developing world*. Washington, DC: World Bank Group.

**World Bank Group** (2025a) *Macro poverty outlook country-by-country analysis and projections for the developing world*. Washington, DC: World Bank Group.

**World Bank Group** (2025b) 'Staying on track', Sri Lanka Development Update, April (https://documents1.worldbank.org/curated/en/099416504222514112/pdf/IDU-5b9c001a-8831-43a2-92e7-71fbee0f642e.pdf).

**பின் இணைப்பு 1** பொருட்கள் மற்றும் சேவை ஏற்றுமதியின் பெறுமதி, வெளிநாட்டு நேரடி முதலீடு, சுற்றுலாத்துறை வருமானம்: நாடுகளுக்கிடையிலான ஒப்பீடு

| | மில்லியன் அமெரிக்க டொலர் | | | | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **பொருட்களின் ஏற்றுமதி** | **2018** | **2020** | **2023** | **2024** | **2018** | **2020** | **2023** | **2024** |
| இலங்கை | 11,890 | 10,047 | 11,911 | 12,772 | 12.6 | 11.9 | 14.1 | 12.9 |
| பங்களாதேசம் | 39,252 | 33,605 | 44,237 | 47,245 | 12.2 | 9.0 | 10.1 | 10.5 |
| கம்போடியா | 12,700 | 17,716 | 23,470 | 26,661 | 38.3 | 50.9 | 55.4 | 56.3 |
| தாய்லாந்து | 252,957 | 231,634 | 285,074 | 300,529 | 49.9 | 46.3 | 55.4 | 57.1 |
| வியட்நாம் | 243,699 | 282,629 | 353,782 | 403,241 | 78.6 | 81.5 | 82.3 | 87.8 |
| **சேவைகளின் ஏற்றுமதி** | **2018** | **2020** | **2023** | | **2018** | **2020** | **2023** | |
| இலங்கை | 2,002 | 3,035 | 5,416 | | 2.1 | 3.6 | 6.4 | |
| பங்களாதேசம் | 2,197 | 6,020 | 6,378 | | 0.7 | 1.6 | 1.5 | |
| கம்போடியா | 1,527 | 1,767 | 4,188 | | 4.6 | 5.1 | 11.4 | |
| தாய்லாந்து | 33,125 | 30,997 | 56,662 | | 6.5 | 6.2 | 11.2 | |
| வியட்நாம் | 7,006 | 6,290 | 19,594 | | 2.3 | 1.8 | 5.3 | |
| **வெளிநாட்டு நேரடி முதலீடு** | **2018** | **2020** | **2023** | | **2018** | **2020** | **2023** | |
| இலங்கை | 1,614 | 434 | 712 | | 1.9 | 0.5 | 0.8 | |
| பங்களாதேசம் | 3,613 | 2,564 | 3,004 | | 0.8 | 0.7 | 0.7 | |
| கம்போடியா | 3,213 | 3,625 | 3,959 | | 7.6 | 10.4 | 9.4 | |
| தாய்லாந்து | 11,705 | -6,284 | 4,548 | | 2.3 | -1.3 | 0.9 | |
| வியட்நாம் | 15,500 | 15,800 | 18,500 | | 3.6 | 4.6 | 4.3 | |
| **உள்வரும் சுற்றுலா செலவினங்கள்**** | **2018** | **2020** | **2022 அல்லது அண்மைக் கால தரவு**** | | **2018** | **2020** | **2022 அல்லது அண்மைக் கால தரவு**** | |
| இலங்கை | 5,608 | 1,076 | 1,357 | | 5.9 | 1.3 | 1.8 | |
| பங்களாதேசம் | 357 | 218 | 420 | | 0.1 | 0.1 | 0.1 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கம்போடியா | 4,832 | 1,119 | 1,529 | | 1.4 | 0.4 | 0.4 | |
| தாய்லாந்து | 61,383 | 14,573 | 16,492 | | 12.1 | 2.9 | 3.3 | |
| வியட்நாம் | 10,080 | 3,232 | 149 | | 3.3 | 0.9 | 0.04 | |

*உள்வரும் சுற்றுலாச் செலவினம், குறிப்பிட்ட பொருளாதாரத்திற்குள் வருகின்ற வெளிநாட்டவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற சுற்றுலாச் செலவினமாக வரையறுக்கப்படுகின்றது.

***வியட்நாமின் அண்மைய சுற்றுலா செலவினம் 2021 ஆம் ஆண்டு நிலவரப்படி.

மூல ஆதாரங்கள்: பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டு வருமானம் தொடர்பாக UNCTAD தரவுத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள், உள்வரும் சுற்றுலா செலவினம் தொடர்பாக UN சுற்றுலா தரவுத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் மற்றும் 2018, 2022, 2023 நிலவரப்படி உலக வங்கியில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள், தற்போதைய மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் மற்றும் உலகப் ஏப்ரல் 2025 ஆம் ஆண்டிற்கான உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் இருந்து பெற்றுக்கொண்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளரால் கணக்கிடப்பட்டுள்ளது.

## பின் இணைப்பு 2 திட்டக் கண்காணிப்பு சிறந்த நடைமுறை

கண்காணிப்பு என்பது செயல்திறனை தீவிரமாக நிர்வகிக்க, நேர்மறையான தாக்கங்களை அதிகரிக்க மற்றும் பாதகமான தாக்கங்களினால் ஏற்படக்கூடிய அபாயத்தைக் குறைக்க அவ்வப்போது தகவல்களைச் சேகரித்து, பகுப்பாய்வு செய்து, பயன்படுத்துவதற்கான ஒரு செயல்முறையாகும். வேறு வகையில் குறிப்பிடுவதாயின், இது ஒரு திட்டத்தின் முன்னேற்றத்தை அதன் முன் வரையறுக்கப்பட்ட இலக்குகள், நோக்கங்கள் மற்றும் காலவரையறைக்கு ஏற்ப பின்தொடர்தல், அளவிடுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றின் தொடர்ச்சியான செயல்முறையாகும்.

- பின்தொடர்தல்: திட்ட நடவடிக்கைகள், அடையப்பட வேண்டிய முக்கிய கட்டங்கள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய தரவுகளைச் சேகரித்தல்.
- அளவிடுதல்: நிறுவப்பட்ட அளவுகோல்களுக்கு ஏற்ப செயல்திறனை மதிப்பிடுவதற்கு சேகரிக்கப்பட்ட தரவை பகுப்பாய்வு செய்தல்.
- மதிப்பீடு செய்தல்: சாத்தியமான சிக்கல்களைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கு பகுப்பாய்விலிருந்து முடிவுகளை பெற்றுக்கொள்ளுதல்.

### கண்காணிப்பின் முக்கியத்துவம்

மதிப்பீட்டில் செயல்படுத்தலை முன்கூட்டியே வடிவமைக்குத் தேவையான ஆரம்ப மற்றும் தற்போதைய தகவல்களை இதனால் வழங்க முடியும் என்பதால் இது பயனுள்ள முகாமைத்துவத்தின் ஒரு முக்கிய பகுதியாகும். மேலும் இதனை பின்வருமாறு விவரிக்கலாம்:

- சிக்கல்களை முன்கூட்டியே கண்டறிதல்: முன்கூட்டியே சிக்கல்களை தீர்க்கக்கூடிய திறன் மற்றும் இடர் குறைப்பு.
- மேம்படுத்தப்பட்ட தீர்மானங்களை மேற்கொள்ளுதல்: திட்டங்கள் மற்றும் வள ஒதுக்கீடுகளில் தகவலறிந்த மாற்றங்கள்.
- மேம்படுத்தப்பட்ட தொலைத்தொடர்பு: பங்குதாரர்களுக்கு தெளிவான மற்றும் சரியான நேரத்தில் புதுப்பிக்கப்பட்ட தகவல்களை வழங்குதல்.
- அதிகரித்த பொறுப்புக்கூறல்: முன்னேற்றத்தைக் கண்காணித்தல் மற்றும் பொறுப்பை உறுதி செய்தல்.
- மேம்படுத்தப்பட்ட திட்ட முடிவுகள்: வரவுசெலவுத் திட்டத்திற்கேற்பவும் திட்டமிட்டப்படி இலக்குகளை அடைவதற்கான அதிக வாய்ப்பு.

### முக்கிய பகுதிகளைக் கண்காணித்தல்

முக்கிய செயல்திறன் பகுதிகள் என்பது ஒரு நிறுவனம், குழு அல்லது திட்டத்தின் வெற்றிக்குத் அவசியமான குறிப்பிட்ட கூறுகள் ஆகும். முக்கிய செயல்திறன் பகுதிகளை வரையறுப்பது கவனத்தை சீரமைக்கவும் வளங்களை ஒதுக்கவும் உதவுவதோடு மட்டுமல்லாமல்,

உற்பத்தித்திறன் மற்றும் செயல்திறனை அதிகரிக்க வழிவகுப்பதோடு அளவிடக்கூடிய இலக்குகளை வடிவமைக்கவும் உதவுகின்றது. மேலும் இதனை பின்வருமாறு விவரிக்கலாம்:

- நோக்கம்: திட்டம் வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குள் இருப்பதை உறுதி செய்தல்.
- நிகழ்ச்சித் திட்ட அட்டவணை: கால வரையறைக்கேற்ப முன்னேற்றத்தைக் கண்காணித்தலும் சாத்தியமான தாமதங்களை அடையாளம் காணுதலும்.
- வரவுசெலவுத்திட்டம்: செலவுகளைக் கண்காணித்தல் மற்றும் அவை எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்தல்.
- தரம்: வழங்கக்கூடியவற்றின் தரத்தை மதிப்பிடுதல் மற்றும் அவை எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்தல்.
- அபாயங்கள்: திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்வதில் காணப்படுகின்ற சாத்தியமான அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து தணித்தல்.
- பங்குதார்களுடனான தொடர்பு: அனைத்து பங்குதாரர்களுடனும் திறந்த மற்றும் பயனுள்ள தகவல் தொடர்பைப் பேணுதல்.

## கண்காணிப்பு முறைகள்

திட்ட செயல்பாடுகள் மற்றும் விளைவுகளை முறையாகக் கண்காணிப்பதற்கு தேவைப்படுகின்ற திட்ட முகாமைத்துவம், ஆய்வு மற்றும் பல்வேறு துறைகளில் ஒரு முக்கியமான கூறாக கண்காணிப்பு விளங்குகின்றது. ஒரு திட்டம் அல்லது நிகழ்ச்சித்ததிட்டம் அதன் இலக்குகளை அடைவதற்கான பாதையில் பயணிக்கின்றதா என்பதை உறுதிப்படுத்த, வழக்கமான தகவல்களைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் தகவல்களைப் பயன்படுத்துதல் போன்றன இதில் அடங்கும். பல்வேறு வகையான கண்காணிப்பு முறைகள் பல்வேறு நோக்கங்களுக்கு உதவுகின்றன, ஒவ்வொன்றும் பயனுள்ள தீர்மானங்களை எடுக்கக்கூடிய தனித்துவமான நுண்ணறிவுகளையும் தரவுகளையும் வழங்குகின்றன.

முக்கிய கண்காணிப்பு முறைகள் கீழே தரப்பட்டுள்ளன:

- வழக்கமான சந்திப்புகள்: திட்ட நிலை சந்திப்புகள், வழிகாட்டுதல் குழு சந்திப்புகள்.
- முன்னேற்ற அறிக்கைகள்: எழுதப்பட்ட அறிக்கைகள், டேஷ்போர்டுகள் (Dashbaords) மற்றும் விளக்கக்காட்சிகள்.
- முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள்: திட்ட செயல்திறனை அளவிடும் முக்கிய அளவீடுகள்.
- சிக்கல் கண்காணிப்பு அமைப்புகள்: சிக்கல்களைக் கண்டறிந்து தீர்ப்பதற்கான கருவிகள்.
- இடர் பதிவேடுகள்: திட்ட அபாயங்களைக் கண்டறிந்து, மதிப்பிடுவதற்கும், குறைப்பதற்குமான கருவிகள்.

## சிறந்த நடைமுறைகள்

எந்தவொரு திட்டம் அல்லது நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றியை உறுதி செய்வதற்கு வெற்றிகரமான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு செயல்முறைக்கான சிறந்த நடைமுறைகள் அவசியம். கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு செயல்முறையானது, கவனம் செலுத்தப்பட வேண்டிய பகுதிகளை முன்னிலைப்படுத்தவும் அல்லது விரும்பிய முடிவுகள் அடையப்படுவதை உறுதிசெய்ய செய்வதற்கு ஏதேனும் மாற்றங்கள் அவசியமா என்பதைக் கண்டறியவும் உதவுகின்றது. மேலும், ஒரு பயனுள்ள கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு செயல்முறையினால் தீர்மானம் எடுத்தலை தெரிவிப்பதற்கு, மிகவும் துல்லியமான மற்றும் சரியான நேரத்தில் தரவை வழங்க முடியும். இந்த சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு செயல்முறை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்து, அவற்றின் இலக்குகளை அடைந்துகொள்ள நிறுவனங்களுக்கு உதவுகின்றது.

குறித்த நடைமுறைகளில் பின்வருவன உள்ளடங்குகின்றன:

- தெளிவான கண்காணிப்புத் திட்டத்தை நிறுவுதல்: எதைக் கண்காணிக்க வேண்டும், எப்படிக் கண்காணிக்க வேண்டும் மற்றும் யார் பொறுப்பு என்பதை வரையறுத்தல்.
- தரவு சார்ந்த அணுகுமுறையைப் பயன்படுத்துதல்: தீர்மானங்களைத் அறிவிப்பதற்கு தேவையான தரவுகளை சேகரித்து பகுப்பாய்வு செய்தல்.
- தொடர்ந்து மதிப்பாய்வு செய்து சரிசெய்தல்: கருத்து மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் கண்காணிப்பு செயல்முறையைத் தொடர்ந்து செம்மைப்படுத்தல்.
- பங்குதாரர்களை ஈடுபடுத்துதல்: கண்காணிப்பு செயல்முறை முழுவதும் பங்குதாரர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கி அவர்களின் ஈடுபாட்டினை உறுதி செய்தல்.
- தொடர்ச்சியான முன்னேற்றங்களில் கவனம் செலுத்துதல்: முன்னேற்றத்திற்கான பகுதிகளை அடையாளம் காணவும் எதிர்கால திட்டங்களை மேம்படுத்தவும் கண்காணிப்புத் தரவுகளைப் பயன்படுத்துதல்.

ODI Global

"ஓடிஐ" சர்வதேச விவகாரங்களுக்கான ஒரு சுயாதீனமான ஆய்வு அமைப்பாகும். அநீதி மற்றும் சமத்துவமின்மைக்கு எதிராக மக்களை ஊக்குவிக்குமுகமாக நாங்கள் பணியாற்றுகிறோம். ஆய்வு மற்றும் கூட்டங்களை நடாத்துவதன் மூலம் மற்றும் அழுத்தங்களை பிரயோகிப்பதன் மூலம், மக்களுக்கும் இவ்வுலகத்திட்கும் முக்கியமான சிந்தனைகளை உருவாக்குகிறோம்.

இலங்கை ஒரு முக்கியமான முடிவினை எடுக்க வேண்டிய ஒரு கட்டத்தில் நிற்கிறது. சுதந்திரத்திற்குப் பிறகு அதன் மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு, மாற்றத்தக்க வளர்ச்சியைத் தூண்டும் அதே வேளையில், கடினமாக வென்ற பேரியல் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பராமரிப்பது என்ற இரட்டைச் சவாலை நாடு எதிர்கொள்கிறது.

"ஓடிஐ க்ளோபல்" மற்றும் வறுமை ஆராய்ச்சி நிலையம் (ஊநுீயு) ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட இந்த அறிக்கை, சிக்கல் மிக்க பகுதியினை வழிநடத்துவதற்கான ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைய நோக்கம் கொண்ட ஒரு உத்தியாகும். இந்த அறிக்கை சமீபத்திய நிலைப்படுத்தல் முயற்சிகள் புதுப்பிக்கப்பட்ட வளர்ச்சி மற்றும் குறைக்கப்பட்ட பணவீக்கம் உள்ளிட்ட நேர்மறையான முடிவுகளை அளித்திருந்தாலும், வறுமை நிலைகள் ஆபத்தான அளவில் அதிகமாகவே உள்ளன என்ற ஒரு முக்கியமான வரைபடத்தை வழங்குகிறது.

எதிர்கால நெருக்கடிகளைத் தவிர்க்கவும், இலங்கையின் பரந்தளவிலான சாத்தியமான சாத்தியப்பாடுகளை திறக்கவும் தொடர்ச்சியான கட்டமைப்பு சீர்திருத்தங்கள் அவசியம் என்று இந்த ஆய்வு வாதிடுகிறது.

மேலும் இந்த ஆய்வு ஆறு முக்கிய கொள்கைப் பகுதிகளில் கவனம் செலுத்துவதன் மூலம் - பேரியல் பொருளாதார ஸ்திரத்தன்மை, உலகளாவிய விநியோகச் சங்கிலி ஒருங்கிணைப்பு, மேம்படுத்தப்பட்ட காரணிச் சந்தைகள், இலக்கு வைக்கப்பட்ட துறைசார் கொள்கைகள், வறுமைக் குறைப்பு மற்றும் அனைத்து தரப்பினர்களும் ஆதரிக்கக்கூடிய ஒரு உடன்பாட்டை கட்டியெழுப்ப ஒன்றிணைந்து செயல்படும் ஒரு கூட்டு செயல்முறையை உருவாக்குதல் - 2025 மற்றும் 2030 க்கு இடையில் நிலையான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை அடைய சுற்றுலா, டிஜிட்டல் பொருளாதாரம், தனித்துவமான உற்பத்தி மற்றும் விவசாயம் ஆகியவற்றில் உள்ள வாய்ப்புகளை இலங்கை பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று குறிப்பிடுகின்றது.

ஓடிஐ க்ளோபல்
203, பிளக்பிரயர்ஸ் வீதி
லண்டன் SE1 8NJ

odi.org
LinkedIn: ODI Trade and Economic Development